மலர்-5 இதழ்-112 ஏப்ரல் 16-30 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

மாதமிருமுறை

ஆன்மிகமலர் mobile app

GET IT ON Google Play

www.aanmeegamalar.com

கொரானா அசுரனை அழிக்கும் மும்மூர்த்திகள்

e- magazine



# புண்ணியத்தை பெருக்கும் அட்சயதிருதியை

# பரசுராமர் உருவாக்கிய

# 108 அம்மன் கோவில் 108 சிவன் கோவில்கள்



கேரளாவில் ஏராளமான அம்மன் கோவில்கள் உள்ளன. ஒவ்வொரு கோவிலுக்கும் தனிச்சிறப்பு உண்டு இங்குமகாவிஷ்ணுவின் அவதாரமாக கருதப்படும் பரசுராமர் இறைவனின் இருப்பிடம் என்று அழைக்கப்படும் கேரளாவை உருவாக்கியதாக புராணங்கள் தெரிவிக்கின்றன

கேரள தேசத்தை உருவாக்கிய பரசுராமர் 108 சிவாலயங்களையும், 108 அம்மன் ஆலயங்களையும் அமைத்தார். கேரளாவில் உள்ள அம்மன் கோவில்களுக்கு என்று தனித்தனி பெயர் கிடையாது அனைத்து அம்மன்களும் அந்தந்த ஊர்களின் பெயர் சேர்த்தே அழைக்கப்படும். அதோடு பகவதி அம்மன் என்றும் சேர்த்து கொள்வார்கள்.

# சிவன்கோவில்கள் சொல்லும் உண்மை

சிவன் ஒன்றும் போகிற போக்கில் தென்படும் விஷயமல்ல.

கோவிலுக்குள் நுழைந்து, சிவனை மறைத்துக் கொண்டிருக்கும் நந்தியை 'கடக்க' வேண்டும். கடந்தவுடன் சிவபெருமான் நம்மை வாரி அணைத்துக் கொள்கிறார். கண்ணீர் மல்க அவருடன் அந்த ஆனந்தத்தை அனுபவிக்கலாம்.

இறைவனை அடைய 'அறிவு' கடக்கப்பட வேண்டும்.

அறிவை கடப்பதா? அது எப்படி? அப்படி ஒரு நிகழ்வு இருக்கவா செய்கிறது? என யோசிக்கிறோம்.

முழு அறிவையும் ஓம் மந்திரத்திலும், புருவ மத்தியிலும் செலுத்தும் போது அறிவானது அங்கே கவனமாக இருக்கும் போது நம்மால் அதன் பிடியிலிருந்து நழுவ முடிகிறது என உறுதியாக நம் முன்னோர் கணித்த கணிப்பை சிவனுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளனர்.



நந்தி எனும் அறிவைக் கடந்தால் சிவன் காட்சி உறுதி என்பதே சிவஸ்தலங்கள் நமக்கு சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கும் உண்மையாகும்!

சிவாலயத்தில் பலி பீடத்துக்கு அருகில்தான் நமஸ்கரிக்க வேண்டும்.

6. 3,4,7,9 என்ற எண்ணிக்கைகளில் ஏதாவது ஒரு எண்ணிக்கையில் நமஸ்காரம் மேற்கொள்ளலாம்.

• • •

கோவிலில் வடதுபுறம், கிழக்குப்புறம் கால் நீட்டக் கூடாது.

• • •

ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்ய வேண்டும்.



## மனக்குழப்பம் கஷ்டம் தீர்க்கும்

# ஸ்ரீ வடகாசி அம்மன் செல்லியம்மன்

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் தாலுகா சேத்தூர் ஜமீன் தேவதானம் கிராமம் இங்கு அன்னை தவம் பெற்ற நாயகியுடனமர்ந்த நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி திருக்கோவில் உப கோவிலான ஸ்ரீ வடகாசி அம்மன் செல்லியம்மன் கோவில் அமைந்துள்ளது.

இக்கோவிலில் சோழர் காலத்தில் கட்டப்பட்டது தஞ்சை பெரிய கோவில் வராகி அம்மன் ரூப மாக செல்லியம்மன் அருள்பாலிக்கிறார். ஊர் நடுவில் வடகாசி அம்மன் மகிஷாசுரமர்த்தினி அமர்ந் திருக்கிறாள், இந்தக் கோயில்கள் இரண்டையும் இப்பொழுது தேவேந்திர சமுதாய மக்களால் பராமரிக்கப்பட்டு வழிபடப்பட்டு வருகிறது.

இங்கு ஆனிமாத பொங்கல் மிகவும் பிர சித்தம் வளர்பிறையில் ஆனி மாதம் முதல் செவ் வாய்க்கிழமை அன்று பொங்கல் கொடி சாத்தி, மறு செவ்வாயன்று பொங்கல் வைத்து, புதன் கிழமை கிடா வெட்டியும், வியாழக்கிழமை கொதி பானையில் மஞ்சள் நீராடியும், பொங்கல் திருவிழா நிறைவடைகிறது.

இந்தக் கோயிலின் சிறப்பு வரலாறு தவம் பெற்ற நாயகிக்கு எல்லை தெய்வமாக இந்த அம்மனை பிரதிஷ்டை செய்தார்கள் சோழர்கள்.

மிகவும் சக்தி வாய்ந்த அம்மன் இடது காலை மடித்து வலது காலை தொங்கவிட்டு அஷ்டபுஜ காலியாக வடக்கு நோக்கி அமர்ந்து இருக்கிறாள் கோரம்பள்ளும் விரிசடையும் கையிலே வலது கையில் சூலாயுதமும் இடது கையில் கபாலமும் ஏந்தி அமர்ந்தவாறு உள்ளார்.

அம்மனுக்கு எதிரே வீரபத்திரன் கிழக்கு நோக்கிய வைரவ சுவாமி தெற்கு நோக்கியும் காட்சி தருகிறார்கள். முற்காலத்தில் இந்த









கோயில் அடர்ந்த வனப்பகுதியில் அமைந்துள் ளது கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகள் பழ மையான கோயில். இப்பொழுது சுற்றிலும் நெல் வயல்கள் சூழ மிகவும் அழகாக காட்சியளிக்கிறது.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு இந்த கோயி லில் மாந்திரீக வேலைகள் அதிகமாக நடை பெற் றது அப்பொழுது அம்பாள் கோயிலை விட்டு வெளியேறி அடர்ந்த வனப்பகுதியில் உள்ள அரண்மனை திருட்டு காளியம்மன் கோயிலில் ஆலமரத்தின் அடியில் தஞ்சம் புகுந்தாள்.

கோயிலில் குடி இருக்காமல் அங்கு சென்ற தனால் இந்த செல்லியம்மன் கோயிலில் பொங்க லன்று மார்வாடி இல்லாமல் மக்கள் தவித்தனர்.

அப்போது வடகாசி அம்மன் மருளாடியிடம் வாக்கு கேட்டபொழுது உன் தங்கை எங்கே என்று கேட்டிருக்கிறார்கள் அப்பொழுது அவள் காளியம்மன் கோயிலில் தஞ்சம் அடைந் திருப்ப தாக சொல்கிறான்.



அம்மனை அழைத்து வர வேண்டும் என்று கூற, "அவளை சீக்கிரத்தில் அழைக்க முடியாது அவளை அழைத்து வர வேண்டும் என்றால் தீச்சட்டி உடன் அழைத்து வர வேண்டும்" என்று மருளாடி வாக்கு கூறினார்.

ஊர் மக்களும் அவ்வாறே செய் தனர் அன்று முதல் இன்றுவரை இந்த கோவிலில் தீச்சட்டி மிகவும் பிரசித்தமானது.

தீச்சட்டி எடுக்கும் பொழுது செல்லியம்மன் வடகாசி அம்மன் நம்மோடு வருவதாக மக்கள் நம்பு கின்றனர்.

முற்காலத்தில் ஒரு முறை ஒரு மூதாட்டி இந்த கோயிலில் வந்து அமர்ந்த பொழுது மிகவும் மயக்க நிலையில் இருந்தார், உணவு இல் லாமல் இருந்தார் அப்பொழுது இந்த அம்மன் ஒரு வயதான மூதாட்டி ரூபத்தில் வந்து கோயிலுக்கு எதிரே உள்ள வரபினை காட்டி, "அங்கிருக்கும் புல்லை பிடுங்கு அதில் உனக்கு அரிசி கிடைக்கும், அதை எடுத்து சமைத்து நாம் இருவரும் சாப்பிடுவோம்" என்றாள்.



மா.பாண்டியன்

அதற்கு கூட்டுக்கறி, கருவாட்டு குழம்பும், அகத்திக்கீரையும் வைத்து சாப்பிட்டார்கள்.

இன்றும் ஆனிமாத பொங்கலன்று இது படைக்கப்படுகிறது இந்த அம்மனை வழிபடுவதால் மனக்குழப்பங்கள் மனக்கஷ்டங்கள் தீர்ப்பதாக மக்கள் நம்புகின்றனர்

மா.பாண்டியன்
தொடர்பு எண்: 9047479415

# கண்பார்வை தந்த ஈசன், திருமண பிரச்சனை போக்கும் தலம்

# உத்தவேதேஸ்வர ஸ்வாமி கோயில்

ஒரு முறை பார்வதி தேவி பூமியில் பிறக்க சபிக்கப்பட்டார், அதன்படி முனிவர் பரதா வின் "காமேஷ்டி யாகம்" நெருப்பிலிருந்து தோன்றிய வரை, முனிவர் தனது சொந்த மகளாக வளர்த் தார்.

குழந்தைப் பருவத்தை இந்த இடத்தில் கழித் தாள். பருவம் அடையும்போது சிவபெருமானை திருமணம் செய்து கொள்ள விரும்பிய அவர், காவிரி ஆற்றின் கரையில் ஒரு சிவலிங்கத்தை நிறுவினார், மேலும் ஒவ்வொரு நாளும் தனது பிரார்த்தனைகளை அங்கு செய்வார். சிவ பெருமான் அவளுடைய தவத்தில் மகிழ்ச்சி அடைந்து, அவள் முன் தோன்றி, சாபம் நிவர்த்தி ஆனதும், விதிப் படி அவளை திருமணம் செய்து கொள்வதாகக் கூறினார்.

எனவே இங்குள்ள ஆண்டவர் "சோனாவாரு அரிவர்" என்றும் புகழப்படுகிறார், அதாவது பார்வதி தேவிக்கு வாக்கு கொடுத்ததன் அடிப் படையில் இவ்வாறு அழைக்கப்படுகிறார்.

தேவி வளர்ந்து திருமண வயதை அடைந்த போது, முனிவர் சிவபெருமானிடம் பிரார்த்தனை செய்தார்.

அவரது வேண்டுதலுக்கு பதிலளித்த சிவ பெருமான், அவர் முன் தோன்றி, விரைவில் தங் களது மகளை திருமணம் செய்து கொள்வதாக கூறினார்.

தங்களுக்கு மகளாக பிறந்திருப்பது பார்வதி தேவி என்றும், சாபத்தின் காரணமாக பூமியில்









அவள் தோன்றினால் என்றும், பார்வதிதேவி விருப்பப்படி அவளை மணப்பதாகவும் சிவபெருமான் கூறினார்.

அதன்படி, அவர்களது திருமண விழா நடந்த இடம் இது என்றும் நம்பப்படுகிறது.

வேதங்களில், இந்த இடம் சோலீஸ்வரம் மற்றும் திருத்துருத்தி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவரம் பாடல்களில், இந்த இடம் "துருதி" என்று குறிப்பிடப்பட்டுள்ளது, அதாவது தமிழில் ஒரு தீவு. பண்டைய காலங்களில் இந்த இடம் காவிரி நதியில் ஒரு தீவாக இருந்தது என்று நம்பப்படுகிறது.

தருமபுரம் ஆதீனத்தின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் வரும் 27 கோயில்களில் இதுவும் ஒன்றாகும்.

திருத்துருதி புராணங்களில் ஒரு சிறப்பு இடத்தைப் பெறுகிறது, ஏனெனில் இந்த கோவிலைச் சுற்றி பாடல் பெற்ற சிவஸ்தலங்களின் புனைவுகளுடன் இத்தலம் இணைக்கப்பட்டுள்ளது. இந்த கோயிலின் ஸ்தல விருஷம், “உக்தலா மரம்”, பார்வதி தேவியுடன் திருமணம் செய்து கொண்ட நேரத்தில் வானுலகிலிருந்து வந்ததாக நம்பப்படுகிறது. இந்த மரத்தை இன்றும் இக்கோவிலில் காணலாம். மேற்கண்ட நிகழ்வு நடைபெற்றதற்கு சான்றாக இன்றும் இந்த மரம் இத்திருத்தலத்தில் உள்ளது.

அதன்படி, இந்த மரத்தின் கீழ் திருமணம் நடந்ததாக கூறப்படுகிறது. இறைவன் விட்டுச் சென்ற பாதணிகளை இம்மரத்தின் அருகில் காணலாம். இந்த வகையான உத்தாலா மரம் உலகில் வேறு எங்கும் கிடையாது என்றும் நம்பப்படுகிறது.

சுந்தரரும் இத்தலத்து இறைவன் மேல் பதிகம் பாடி இருக்கிறார். சங்கிலி நாச்சியாருக்கு திருவொற்றியூரில் செய்து கொடுத்த சத்தியத்தை மீறி அவளைப் பிரிந்து சென்றதால் இரண்டு கண்களையும் இழந்து உடல் நலிந்து திருத்துருத்தி வந்திருக்கிறார்.

காஞ்சீபுரத்தில் ஒரு கண்ணில் பார்வையை மீண்டும் பெற்றாலும் நலிந்த உடலுடன் இத்தலத்திற்கு வந்து இங்குள்ள இறைவனை மனமுருகி வேண்டி தன்னை மன்னித்தருளும்படி வேண்டினார். இறைவனும் ஆலயத்தின் வடபாகத்திலுள்ள தாமரைக் குளத்தில் நீராடினால் உன் உடற்பிணி தீர்ந்துவிடும் என்று அருளினார். சுந்தரரும் அவ்வாறே செய்ய, நீரிலிருந்து எழும்போது முன்னிலும் பளபளக்கும் திருமேனி எழிலுடன் திகழ்ந்தார். அப்போது தான் திருத்துருத்தியையும், திருவேள்விக்குடியையும் இணைத்து

மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி
வெடிபடக் கரையொடுந்
திரைகொணர்ந் தெற்றும்
அன்னமாங் காவிரி அகன்கரை உறைவார்
அடியிணை தொழுதெழும்
அன்பராம் அடியார்
சொன்னவா றறிவார்
துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச்
செடியனேன் நாயேன்
என்னைநான் மறக்குமா
றெம்பெரு மானை
என்னுடம் படும்பிணி
இடர்கெடுத்
தானை.



எனத் தொடங்கும் பதிகம் பாடினார். சுந்தரமூர்த்தி நாயனாரின் பிணி தீர்த்ததால் தாமரைத் தடாகத்திற்கு சுந்தர தீர்த்தம் என்று பெயர் ஏற்பட்டது. தீர்த்தக்கரையில் சுந்தரருக்கு கோயில் உள்ளது.

இந்த ஆலயம் ஊருக்கு நடு நாயகமாக விளங்குகிறது. 5





நிலை இராஜகோபுரம் மேற்கு நோக்கி உள்ளது. இரண்டு பிரகாரங்கள் கொண்டது. கோபுர வாயில் வழியாக உள்ளே நுழைந்தவுடன் கொடி மரம், பலிபீடம் உள்ளன.

வலதுபுறம் ஸ்தல விருட்சமான உத்தால மரமும் அதை சுற்றி உள்ள பீடமும் உள்ளது. மூலவர் சந்நிதி மேற்கு பார்த்து அமைந்திருக்கிறது. பக்கத்திலேயே தெற்குப் பார்த்த இறைவியின் சந்நிதி உள்ளது. இவ்விரு கோவில்களும் தனித்தனியே வலம் வருமாறு தனிப் பிரகாரங்களோடு அமைந்துள்ளன. அம்பிகையை மணந்து கொள்ள வந்த இறைவனுக்குத் துணையாக வந்த விநாயகர் "துணைவந்த விநாயகர்" என்ற பெயருடன் அம்பாள் சந்நிதிக்கு செல்லும் வழியில் வெளிப் பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில் கோயில் கொண்டிருக்கிறார்.

உட்பிரகாரத்தில் வலஞ்சுழி விநாயகரையும் தரிசிக்கலாம். கிழக்குப் பிரகாரத்தில் மேற்கு நோக்கி எழுந்தருளியிருக்கும் ஸ்ரீசண்முகர் கலையழகுடன் காட்சி அளிக்கிறார்.

பிரகாரத்தின் கிழக்குப் புறத்தில் நவக் கிரகங்கள், சப்தரிஷீஸ்வரர், சனீஸ்வரர், பைரவர் மற்றும் பஞ்ச லிங்கங்கள் ஆகிய சந்நிதிகள் உள்ளன. சுவாமி கருவறை விமானத்திலுள்ள சுதைச் சிற்பங்கள்யாவும் பெரியவையாகவும், கலையழகோடும் காணப்படுகின்றன.

அக்னி பகவான் இத்தலத்து இறைவனை வழிபட்டு தன் பாபங்களை போக்கிக் கொண்டுள்ளார். காசிபன், ஆங்கிரசன், கௌதமன், மார்க்கண்டேயர், வசிஷ்டர், புலஸ்தியர், அகஸ்தியர் ஆகிய சப்தரிஷிகளும் வழிபட்டு இத்தலத்தில் பேறு பெற்றுள்ளனர். சூரியன், பரத முனிவர் ஆகியோரும் இத்தலத்து இறைவனை வழிபட்டு பெறும் பேறு பெற்றிருக்கின்றனர்.



புனிதவேல்



முருகனின் சிலை மிகவும் அழகாக இருக்கிறது. இந்த சிலையின் தனித்துவமான அம்சம் என்னவென்றால், அவரது மயில் ஏற்றத்தை அவருக்கு முன்னால் காணலாம்.

கருவறை கோபுரத்தில் பல அழகான சிற்பங்கள் உள்ளன, அவை அந்தக் கால கலைஞர்களின் முன்மாதிரியான கைவினைத்திறனை எடுத்துக் காட்டுகின்றன. இத்தலம் திருமண தோஷத்தை நீக்கும் தலமாக திகழ்கிறது.

மயிலாடுதுறை முதல் கும்பகோணம் பாதையில், சுமார் 12 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. இது கும்பகோணத்திலிருந்து 24 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

குத்தலத்தில் ஒரு ரயில் நிலையம் உள்ளது, ரயில் நிலையத்திலிருந்து 2 கி.மீ தூரத்தில் இத்திருக்கோவில் உள்ளது.

இத்தலத்தைச் சுற்றி பல்வேறு தேவார பாடல்பெற்ற ஸ்தலங்கள் உள்ளன.

தொகுப்பு: புனிதவேல்

தொடர்பு எண்: 9841807572

# கருவறை பீடத்தில் திருமுறை யந்திரங்கள்

கோவில் கருவறை பீடத்தின் கீழ் சில முக்கியமான யந்திரங்கள் வைக்கப்படும். இதற்குள் ஏராளமான அறிவியல் உண்மைகள் பொதிந்துள்ளது.

மந்திர ஒலிகளை உள்வாங்கி, வழிபடும் அடியார்களுக்கு உளமகிழ்வு தரும் என்பதும் அனைவரும் கண்ட உண்மை.

நேர்மறை எண்ணங்களை நமக்கு வழங்கிடும் முதன்மையான இடம் ஒன்று உண்டெனில், அது நமது திருக்கோவில்கள் மட்டுமே.

கடவுள் சிலைக்குக்கீழ் வைக்கப்படும் யந்திரங்களே அதற்குரிய முழுமுதற்காரணமாகும்.

புகழ்பெற்ற திருக்கோவில்களில், யந்திரங்கள் வைப்பதற்குகென்றே சிறப்பான ஆகம முறையினைக் கையாள்வர்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை திருக்குட நன்னீராட்டின் பொழுது அவை மீண்டும் புதுப்பிக்கப்படும்.

16-30 ஏப்ரல் 2021

கோவில் எனும்போதே, சிலைகளுக்குக் கீழ் வைக்கப்படும் யந்திரங்கள் மிகவும் முக்கியமான இடம்பெறும் என்பதில் அய்யமில்லை.

பஞ்சபூத ஆற்றலைக் கோவில் கருவறைக்குள் நிலைநிறுத்துவதில் யந்திரங்களின் பங்கு மகத்தானது.

நமது இல்லங்கள், அலுவலகம், மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு அமைக்கப்படும் யந்திரங்களுக்கே நிறைய ஆகம விதிகள் உண்டு. அவ்வாறானால், கோவில் பீடங்களுக்கு அமைக்கும் யந்திரங்களுக்கு எவ்வளவு விதி முறைகள் இருக்கும்...?

தூய மந்திரங்களாலும், வேள்விகளாலும், மிகவும் முறையான ஆகம முறைகளுடன் அமைத்தல் அவசியம்.

நம் முன்னோர்கள் கோவில் திருப்பணிகள் தொடங்கும் பொழுதே, அதற்குரிய சிவாச்சாரியார்களைக் கொண்டு இறைத்தன்மையை உளமார உணர்ந்து, இதுபோன்ற பணிகளை சிரமேற்கொண்டு செய்து முடித்துள்ளனர்.

தூய்மையான உலோகத் தகடுகளைப் புனிதப்படுத்துதல், பிழை சிறிதுமின்றி நேர்த்தியாகக் கையால் மட்டுமே எழுதுதல், அளவுகள், இறைவனுக்கேற்ற சக்கரங்கள் தேர்ந்தெடுத்தல், அதற்குரிய மந்திரங்களால் உயிர்பெறச் செய்தல், தூய [illegible]ளாதி திரவியங்கள், நிவேதனம், வேள்விகள், மற்றும் பல்வேறு முறைகளால் உருவாக்கம் பெறும் யந்திரங்களுக்கு சிறப்புகள் பல உண்டு.

கருவறையில் வீற்றிருக்கும் இறைவனுக்கு அருகில் சென்று நீங்களும் வணங்கிப் பாருங்கள், மேற்கண்ட உண்மைகளை உணர்ந்து மகிழ்ந்திடுவீர்.

**– ஆர். சதீஷ், கடலூர்**
aboorvam divine centre
**போன்: 9655714283**



# எந்த விதமான கட்டணமும் இல்லை

# தரத்தில் முதலிடம்

# முற்றிலும் இலவசம்




உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக
வெளிவரும் **ஆன்மிக மெயில் புத்தகம்**

## இலவசமாக படிக்க

aanmeegamalar.com

aanmeegamalr app-லும் படிக்கலாம்

GET IT ON Google Play

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

பெற 9444228203

இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com

# அற்புதம் மிகுந்த கம்பாநதி ஆலயம்




அருள்மிகு வேதகிரீஸ்வரர் மலை ஏறும் சமயம் நெட்டுபடி நடுவில் அருள்மிகு கம்பாநதி ஆலயம் அமைந்துள்ளது. ஆலயம் பற்றிய ஆன்மீக தகவல்:

இறைவியான ஏலவார்குழலி அம்மையார், உலகம் உய்யவும், ஆகமவழியின்படி ஈசனை பூசிக்கவும் கயிலையிலிருந்து காஞ்சிபுரத்திற்கு எழுந்தருளினார்.

அங்கு கம்பையாற்றின் கரையில் திருவருளால் முளைத்து எழுந்த சிவலிங்கத் திருவுருவைக் கண்டு பூசித்தார். அதுபொழுது கம்பை மாநதி பெருக்கெடுத்து வந்தது. அம்மையார் பயந்து பெருமானை இறுகத் தழுவிக்கொண்டார்.

அப்பொழுது இறைவனது லிங்கத் திருமேனி குழைந்து வளைத்தழும்பும் முலைத் தழும்பும் தோன்றக் காட்சியருளினார். அதுகாரணம்பற்றித் சிவனுக்கு தழுவக் குழைந்தநாதர் என்னும் பெயர் உண்டாயிற்று. அந்த நிகழ்வினை விளக்கும் ஆலய சிலைதான் (மேலே படத்தில்) உள்ளது...

## முத்திகைநல்லாங்குப்பம் பெயர்வர காரணம்

பழைய காலத்தில் திருக்கழுக்குன்றத்தில் அதி காரம் பெரும்பாலும் உருத்திர கணிகையரிடம் இருந்ததென்றும், நாச்சிமுத்து இங்கே முத்தி பெற்ற உரிமையினால் இந்நிலையை அவர்கள் பெற்றிருந்தனரென்றும் சிலர் கூறுவர்.

ஆறு கணிகையர் தலைமை வகித்தரென்றும் அவர்களுக்கு ஆறவட்டதாரென்னும் பெயர் வழங்கிவந்தனர். அவர்களில் ஒருத்தி முத்தி நல்லாளென்றும் அவள் பெயரால் முத்தி நல்லாள் ஷேத்திரம் என வழங்கியதை அறியமுடிகின்றது: சரி நாச்சிமுத்து என்பவர் யார். அவர் எப்படி முத்தி அடைந்தாள்? அதனை பார்க்கலாம்.

நாச்சி முத்து முக்தி பெற்ற வரலாறு:

திருக்கழுக்குன்றத்து வேதகிரீஸ்வர அடியார்க்கு நல்லார் என்பது அவர் நாச்சிமுத்து என்கின்ற பெண்ணிற்கு அறித்த பெரும்பேறால் அறிய கிடைக்கின்றது. நாச்சிமுத்து அம்மையார்



www.aanmeegamalar.com





நாள்தோறும் வேதகிரீஸ்வர் மலைக்கு சென்று இறைவன் முன்னிலையில் திருக்கழுக்குன்ற மாலைப் பாடல்களை பாடி வணங்கி வருவது வழக்கம். ஒரு நாள் பெருமழையால் நாச்சிமுத்து அம்மையாரால் வேதகிரீஸ்வர் மலைக்கு செல்ல முடியவில்லை. அங்கனம் போக முடியாத சமயம் தன் வீட்டிலிருந்தபடியே “எம் பெருமானே” இம் முற்றத்திலே வந்து முன் நின்றால் எளியேன் பாடி மகிழ்வேன் என கூறி இரங்கி,

பெற்றத்தி லேவருங் கோலமும்
தாமுமென் பெண்மையுய்ய
முற்றத்தி லேவந்து முன்நிற்கி
லோ! முது வானவர்தம்
சுற்றத்தி லேகதிர்த் தோற்றத்தி
லேதொல்லை நான்மறைநூல்
அற்றத்தி லே கழுக் குன்றத்தி
லேநிற்கும் அற்புதனே!

என்னும் பாடலைப் பாடி மன முருக இறைவன் இவள் வீட்டு முற்றத்திலே வந்து காட்சி தரஇவள் பேரானந்த்துடன் இறைவனை வணங்கி எழுந்தாள். பின்னர்இறைவன் எழுந்தளும் போது அவரை பிரிய மனம் இல்லாமல் அவரது இடபவாகனத்தின் திருவடி யை இவள் பிடித்துக்கொண்டுஅப்படியே கயிலைக்கு கிளம்ப, அக்காட்சியை கண்டு நின்ற அவள் ஆசிரியர் வைணவர் அவளுடன் தாமும் சேரந்து கயிலைக்கு சென்று சேர்ந்தாராம். அதற்கான பாடல்

“உருக்கமுள ஒருதாதி நாச்சிமுத்
தென்னுமவள் ஒருவயிணவன் பாடிய
உயர்கழுக் குன்றமா லைப்பிரபந்
த்திளாள் ஒன்றினுக்கு ஒரு கவிதையாய்ச்
சருக்கரை கலந்தபா லமுதமென
மலையின் மேல் தம்பிரான் முன்பு பாட
சண்டா ருதமழையி னாற்றப்ப
ஒருதினம் தாதிதான் பாட ஈசன்
அருக்கணாயிரகோடி என விடையில் வர
விடையின் அடியைப்பிடிக்கும் அவளோ
டவளடி பிக்குமவ்வ வயிணவனை
யுங்கொண்டுபோய் கயிலை
வாழவைக்கும்
திருக்கழுக் குன்றமெனும்
வேதகிரி வருமுருக சிறுபறை
முழக்கி
யருளேள! சிறியனேன் கேட்கவே
அருள்நாத
ஒலியெனும் சிறுபறை முழுக்கி
யருளே!


வேலன்

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.

# கோமதி சக்கரம்

மகத்துவங்கள் நிறைந்த

கோமதி சக்கரத்தின் நன்மைகள் சூரியனுக்கு கீழுள்ள பூமியில் எவ்வள வோ அதிசயங்கள் நமக்கு எட்டாமல் இன்று வரையில் இருக்கின்றனஎன்பதை, நமது அன்றாட வாழ்விலும் அறிவியல் ஆய்வுகளிலும் பார்த்து வருகிறோம். ‘காரணமின்றி எவ்விதமான துன்பங்களையும் மனித குலம் அடைய வேண்டாம்’ என்றுதான் அனைத்து மகான்களும் விரும்பினார்கள். அதற்கேற்ப பல்வேறு வழி பாடுகளையும், இறையருளை பெற்று தரக்கூடிய சாதனங்களையும் அடையாளம் காட்டியதோடு, அவற்றை எவ்வாறு தக்க வழிகளில் பயன்படுத்துவது என்பதையும் சொல்லிச் சென்றிருக்கிறார்கள். அத்தகைய பொருட்களில் கோமதி சக்கரம் என்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது. தற்காலத்தில் பல துறைகளை சார்ந்த பிரபலங்களும் ‘டாலிஸ்மன்’ எனப்படும் ‘டாலர்’ வடிவத்தில் கோமதி சக்கரத்தை அணிந்து பயன் பெற்று வருகிறார்கள். இந்த அற்புத கோமதி சக்கரம் பற்றி நமது aanmeegamalar.com வாசகர்களுக்கு விரிவாக தொகுத்துள்ளோம்.

ஆன்மிக வளங்களை தாங்கி நிற்கக்கூடிய பொருட்களில், நம்மால் அதிகம் அறியப்படாத பொருளாக ‘கோமதி சக்கரம்’ இருக்கிறது. இது சங்கு போன்ற ஒரு வகை சிறிய கல் ஆகும். குஜராத் மாநிலம் துவாரகாவில் உள்ள கோமதி நதியில் அதிகமாக கிடைப்பதால், அந்தப் பெயர் வந்து விட்டது. வட மாநிலங்களில் பிரபலமாக உள்ள ஸ்ரீமகாலட்சுமி அம்சம் பொருந்திய இந்த வகைக் கல், தென் மாநிலங்களில் அதிகம் அறியப்படாமல் இருப்பதற்கு காரணம், அதனை ரகசியமாக பலரும் பயன்படுத்தி வந்ததுதான். பூஜை அறையில் வைப்பதோடு, மோதிர வடிவத்திலும், கழுத்தில் அணியும் சங்கிலி வடிவிலும் இந்த கோமதி சக்கரத்தைப் பயன்படுத்தலாம். திருமகளின் அருளைஎளிதாக பெற்றுத்தரும் பொருட்களில் ஒன்றாக இருக்கும் கோமதி சக்கரம் பற்றிய பல்வேறு தகவல்களை இங்கே காணலாம்.



## ராமர் கணையாழி

ராமபிரான், ஆஞ்சநேயர் மூலம் சீதாதேவிக்கு தன்னை அடையாளம் காட்ட கொடுத்தது

ரகுவம்ச கணையாழி ஆகும்.

அதில் கோமதி சக்கரம் பதிக்கப்பட் டிருந் ததாக புராணங்கள் கூறுகின்றன. மேலும் 108 திவ்ய தேசங்களில் ஒன்றாக விளங்குவது லக்னோவில் உள்ள நைமிசாரண்யம். இங்கு பெருமாளின் சக்ராயுதம்உருண்டு ஒடி, தவம் செய்ய சிறந்த இடத்தை முனிவர்களுக்கு காட்டியது. அவ்வாறு சக்ராயுதம் உருண்டு ஒடியபோது, அங்கிருந்த ஆற்றில் சக்ராயுதம் பட்டு தெறித்த நீர்த்துளிகள் தான், கோமதி சக்கரமாக மாறியதாக ஐதீகம். கோமதி சக்கர கல்லின் வேறு பெயர்கள் துவாரகா கல், விஷ்ணு சக்கர கல், நாராயண கல், திருவலஞ்சுழி கல் ஆகியனவாகும்.



கோமதி சக்கரத்தை வணங்குவதன் வாயிலாக அயோத்தி, மதுரா, ஹரித்துவார், காசி, காஞ்சீபுரம், அவந்திகா எனும் உஜ்ஜையினி, துவாரகை ஆகிய முக்தி தரும் 7 தலங்களை வணங்கிய பலன் கிடைக்கும். ஸ்ரீகிருஷ்ணர், கோமதி சக்கரத்தின் மீது அமைந்த தர்ம சபையில் வீற்றிருந்து ஆட்சி செய்து வந்தார் என்கிறது புராணம். சொர்க்க துவாரம், மோட்ச துவாரம் என்ற இடத்தில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் இந்த கல்லை விஷ்வகர்மா மூலமாக உருவாக்கி துவாரகை மக்களின் சங்கடங்களை தீர்க்க அருளியிருக்கிறார்.

## பிள்ளையார் சுழி

கோமதி ஆறு, சரயு நதி ஆகிய இரு நதிகளும் சேரும் இடத்தை, இரு பாம்புகள் கூடும் இடம் என்று கூறுகிறார்கள். லக்னோவில் கோமதி நதியும், அயோத்தியில் சரயு நதியும் உருவாகிறது. இவ்விரு நதிகளிலும் அபூர்வமான கோமதி சக்கரங்கள் கிடைக்கின்றன. ஸ்ரீவிநாயக பெருமானோடும், நாக தேவதையோடும் தொடர்புள்ளதாக கோமதி சக்கரம் கருதப்படுகிறது. அதாவது எந்தச் செயலையும் தொடங்குவதற்கு முன்னர் பிள்ளையார் சுழி போடுவது வழக்கம். பிள்ளையார் சுழியின் இன்னொரு பெயர் ‘கோமதி திருவலஞ்சுழி’ எனப்படும். இதன் உட்பொருள்,சுபம் மற்றும் லாபம் என்பதாக உள்ளது. சுதர்சன சக்கரத்திற்கும் முந்தையதாக கோமதி சக்கரம் கருதப்படுகிறது.

## நட்சத்திர பாகங்கள்

அவரவருக்கு உரிய நட்சத்திரத்திற்குரிய பாகத்தைஅறிந்து அந்தப் பகுதியை தொட்டோ அல்லது மனதில் நினைத்தோ தெய்வத்தை வழி படுவதன் மூலமாக, பூரண அருளை பெற இயலும் என்பது ரகசிய பூஜை வழிமுறையாக இருந்து வருகிறது. மேலும் அவ்வாறு வழிபடும் போது, கோமதி சக்கரமானது நம்முடன் இருக்கும் பட்சத்தில் லட்சுமி கடாட்சம் நன்றாக கிடைக்கும் என்பது நம்பிக்கை. நட்சத்திரங்களுக்குரிய பாகங்களை கீழே காணலாம்.

- அசுவினி, பரணி, கிருத்திகை நெற்றி. ரோகிணி, மிருகசீரிஷம், திருவாதிரை முகப்பகுதி.
- புனர்பூசம், பூசம் இரு தோள்கள்.
- ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம் மார்பு பகுதி.
- சித்திரை வயிற்று பகுதி.
- சுவாதி, விசாகம் புஜங்கள்.
- அனுசம் உடலின் மைய பகுதி.
- கேட்டை, மூலம் இரண்டு கைகள்.
- பூராடம், உத்திராடம் இரண்டு தொடைகள்.
- திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி கால் பாதங்கள்.

நாம் எந்த தெய்வத்தை வணங்கினாலும், நமது நட்சத்திரத்திற்குரிய பாகத்தை மனதில் கொண்டு, அந்த பாகம் எதுவோ அப்பகுதியை மனதால் நினைத்தோ அல்லது தொட்டோ வணங்க வேண்டும். அதன் வாயிலாக நமது வேண்டுதல்கள் அதிசயிக்க தக்க விதத்தில் நிறைவேறும் என்பது நம்பிக்கை.

## கோமதி சக்கரத்தின் சிறப்பு

- வலப்புற சுழி அமையப் பெற்ற கோமதி சக்க

ரத்தை அனைவரும், எவ்வித பாகுபாடும் இல்லாமல் வழிபாடு செய்யலாம்.

- கோமதி சக்கரமானது பூஜையில் வைக்கப்படும்போது. நிமிர்ந்த நிலையில் வைக்கப்படவேண்டும். அதிலுள்ள சுழியானது மேல் நோக்கியவாறு இருக்க வேண்டும். முக்கியமாக சிவப்பு பட்டுத்துணியில் வைத்து அதை ஒரு வெள்ளி அல்லது செம்பு தட்டில் வைக்கவேண்டும்.
- வில்வ இலையானது காய்ந்துவிட்டாலும், ஆறுமாதங்கள் வரையில் பலன்தரும். ஆனால் கோமதி சக்கரம் எவ்வளவுநாட்கள் ஆனாலும், தவறாது பலன் அளிக்கக்கூடியது. இன்றைக்கும் வட மாநிலங்களில்உள்ள பெரியவர்கள், ஒருவரை ஆசீர்வதிக்கும்போது அவர்களது தலைப்பகுதியில் கோமதி சக்கரத்தை வைத்து ஆசீர்வதிப்பது வழக்கம்.
- கோமதி சக்கரத்தை விலைக்கு வாங்குவதை காட்டிலும், பெரியோர்களிடமிருந்தோ அல்லது உறவினர்களிடமிருந்தோ அன்பளிப்பாக பெறுவதே சிறப்பானது. விலைக்கு வாங்குவதாக இருந்தாலும் நல்ல நாளாக பார்த்து வாங்குவது சிறப் பைத் தரும்.
- மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் கொள்ளும் தொடர்புகள் மூலம், அவரவருக்கு தக்கவாறு உயர்வையோ அல்லது தாழ்வையோ அடைகிறார்கள். எழுதிச் செல்லும் விதியின் கைகள், யாரை யாரோடு சந்திக்க வைக்கிறது என்பதை மனிதர்களால் நிர்ணயம் செய்ய முடிவதில்லை. விதியின் தொடர்பு இல்லாமல் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ள முடிவதில்லை. ஒருவரோடு கொள்ளும் தொடர்பின் வாயிலாக வாழ்வை சிறப்பாக அமைத்து கொள்ள வலஞ்சுழி அமைப்பு கொண்ட கோமதி சக்கரம் உதவுகிறது.
- ஒரு மனிதருடைய சுழி என்பது, அவருடைய தலை விதியை குறிப்பதற்காக சொல்லப்படுவதாகும். அத்தகைய சுழியா னது பல உயிர்களிலும் இறைவனால் அருளப்பட்டதாக அமைந்திருக்கிறது.மனித உடலில் அவை, கைகள், கால்கள், தலை உச்சிப்பகுதி, முன் நெற்றி, ஆகிய வற்றில் அமைந்திருக்கும். நம் முடைய காதுகளின் அமைப்பும் வலஞ்சுழியாக அமைந்திருப்பதை காணலாம். எந்த ஒரு தெய்வத்தையும் மூன்றுமுறை சுற்றி வலம் வருவது ‘கோமதி சுற்று’ எனப்படும். இப்படி உலக இயக்கத்தோடு இணைந்து செயல் படுவதால், கோமதி சக்கரம் மனதின் எண்ணங்களை வலிமை பெறச் செய் கின்றன.



ஆர். சதீஷ்,

- கோமாதா என்று போற்றப்படும் காமதேனுவின் அம்சம், கோமதி சக்கரத்தில் உள்ளது. எனவே நமது விருப்பங்கள் நிறைவேறக்கூடிய வாய்ப்புகள் தாமாகவே உருவாகும். வலமாக அமைந்த சுழிகள், பசுவின் கண்கள், முதுகு, கால் குளம்புகள், வாலின் மேல் பகுதி, நெற்றி, கழுத்து, அடிவயிறு ஆகிய பகுதிகளில் இருக்கும். காமதேனு என அழைக்கப்படும் பசுவின் சகல சுழிகளும், ஸ்ரீஹரியால் உருவாக்கப்பட்டதால் விசேஷமான அர்த்தம் பெற்றவையாக இருக்கின்றன.
- கோமதி சக்கரத்தை, நாக சக்கர மோதிரமாக செய்து, சர்ப்ப தோஷம் விலக பயன்படுத்துகிறார்கள். அதாவது அதன் சுழியானது பாம்பு தனது உடலை சுற்றி வைத்திருப்பது போன்ற தோற்றத்தில் இருப்பது கவனிக்கத்தக்கது. ராகு தசையால் பாதிக்கப்பட்டவர்கள் கோமதி சக்கரத்துடன் கோமேதக கல்லையும் சேர்த்து வைத்து வீட்டில் வழிபட்டு வரலாம்.
- கேதுவின் தசையானது ஜாதக ரீதியாக பாதிப்பை தரும் அமைப்பில் இருந்தால், அந்த நபர் கோமதி சக்கரத்துடன், வைடூ ரிய கல்லை வைத்து வீட்டில் வழிபட்டு வரலாம். தங்களது ஜாதகங்களில் கால சர்ப்ப தோஷம் மற்றும் சர்ப்ப தோஷம் இருப்பவர்கள் கோமதி சக்கர வழிபாட்டை செய்து வருவது நல்லது.

– ஆர். சதீஷ், கடலூர்
aboorvam divine centre
போன்: 9655714283

# சிறு சாபம் கூட பேரழிவை தரும்

# இராவணனை அழித்த நந்தி சாபம்

சிவனிடம் பெற்ற வரத்தின் பலனால், சகல உலகங்களையும் ராவணன் அடிமைப்படுத்தி வைத்திருந்தான். குபேரனையும் விட்டு வைக்க வில்லை, குபேரனிடமிருந்து புஷ்பக விமானத்தை பறித்து சென்றான்.

நவக்கிரகங்கள் கூட அவனுக்கு அடிமைப்பட் டிருந்தன. அவன் சிம்மாசனம் ஏறும் போது ஒவ் வொரு படியிலும், ஒவ்வொரு கிரகநாயகரும் வந்து படுத்துக் கொள்வார்கள். அவர்களின் முதுகின் மேல் அவன் ஏறிச்செல்வான். சிவபக்தர்கள், நவக்கிரகங்களைக் கண்டு அஞ்சவேண்டியதில்லை என்பது இதன் தாத் பர்யம்.

அவனது தந்தை விச்வரஸும் சிறந்த சிவபக்தர். வழிவழியாக சிவ பக்தர்களாக இருந்ததால், வலிமை மிக்கவர்களாக அவர்கள் விளங்கினர்.

சிவபெருமானின் வரத்தால், மிகுந்த சொகுசு வாழ்க்கை வாழ்ந்த இராவணன் குபேரனி டமிருந்து பறித்த புஷ்பக விமானத்தில், ஆணவத்துடன் வலம் வந்து கொண்டிருந்தான், இடையில் கயிலாய மலை குறுக்கிட்டது. அதைச் சுற்றிச் செல்ல ராவணனுக்கு கவுரவக் குறைச்சலாக இருந்தது.

வரம் தந்த சிவனின் இருப்பிடத்தையே அலட் சியப்படுத்தினான்.

அப்போது, கயிலாயத்தின் காவலரான நந்தீஸ்வரர், ராவணனிடம்,

"ராவணா! நீ சிறந்த சிவபக்தன் என்பதை நான் அறிவேன். இவ்வழியாக வருபவர்கள் கயி லாய மலையைச் சுற்றிச் செல்வதே வழக்கம், நீயும் அப்படியே செல். அதுதான் முறை" என்றார் பவ்வியமாக.

ராவணனுக்கு கோபம் வந்து விட்டது.

"காளை முகம் கொண்ட நந்தியை, குரங்கு மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு, எனக்கே புத்தி சொல்கிறாயா! போடா குரங்கே!" என கடுமையான வார்த்தைகளால் திட்டினான்.

ஒருவர் அழகில்லாமலோ, உடல் குறையுடனோ இருந்தால் அவர்களின் குறையைச் சொல்லி அவமானப்படுத்துவது பெரும் பாவத்தைக் கொண்டு வரும்.

ராவணன் தேவையில்லாமல் நந்திஸ்வரரைத் திட்டியதால் அவனது தவவலிமை குறைந்தது.

நந்தீஸ்வரர் பெரும் வயிற்றெரிச்சலுடன், "ஏ ராவணா! என்னைக் குரங்கென்று பரிகாசம் செய்த நீயும், உன் தேசமும் அதே குரங்குகளால் அழிந்து போவீர்கள்!" என்று சாபமிட்டார்.

நாம் ஒருவரைப் பழித்தால், என்ன சொல்லி பழிக்கிறோமோ, அதே பழி நம்மையே திரும்பத் தாக்கும்.

அதன்படி இலங்கை ஆஞ்சநேயர் உள்ளிட்ட வானரங்களால் அழிந்தது நந்தியின் சாபத் தால்தான்.



# பெண்ணை திருமணம் செய்து தங்கள் வீட்டிற்கு வருவதற்கு வேதகால ஆண்கள் கொடுத்ததே

# வரதட்சணை



இந்து மதத்திற்கு மட்டுமல்ல ஆசியப்பகுதி சிந்தனை மரபுகளுக்கே மூலகாரணமாக இருப்பது வேதங்கள் என்பது நாமறிந்த விஷயம் தான். நம்மில் பலருக்கு வேதங்களின் பெயர்கள் தெரிந்தளவிற்கு அவற்றில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் என்னவென்று முழுமையாக இன்று வரை தெரியாது.

அதற்கு வேதங்கள் வடமொழியில் எழுதப்பட்டுள்ள விஷயங்கள் ஒரு குறிப்பிட்ட சாதியார் தவிர மற்றவர்களுக்கு படிக்க அனுமதி இல்லை என்று பல காரணங்கள் சொல்லப்பட்டாலும் கூட அவைகள் முற்றிலும் உண்மை என்று கருத இயலாது. வடமொழி அறிந்தவர் கூட வேதம் படிக்கும் தகுதியை பெற்றவர் கூட வேதத்தின் உண்மை பொருளை உணர்ந்தவர்களாக இல்லை என்பது தான் உண்மை.

வேதங்களில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களே இன்னும் முழுமையாக அறிந்து கொள்ளபடாமலிருக்கும் போது வேதகால மக்களின் வாழ்க்கை தரம், வாழ்க்கை முறை எப்படியிருந்தது என அறிந்து கொள்வதும் கடினம். அறிய முயற்ச்சிப்பவர்களும் மிக குறைவு. அப்படியே தப்பி தவறி முயற்சி செய்பவர்கள் ஒன்று வேதங்களை திட்டுபவர்களாகவோ அல்லது அதீதமாக போற்றி புகழ்பவர்களாகவோ இருந்து விடுகிறார்கள். இதனால் உண்மையான நிலவரத்தை அறிய ஆர்வமுடையவர்கள் அறிந்து கொள்ள முடியாத நிலை உள்ளது. எனவே இந்து மத வரலாற்றை முழுமையாக இல்லையென்றாலும் ஓரளவாவது அறிந்து கொள்ள வேதகால சமுதாயம் எப்படியிருந்தது என்பதை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அப்படி அறிந்தால் தான் வேத கருத்துக்களையும் இந்து மத



www.aanmeegamalar.com

சிந்தனைகளையும் நம்மால் புரிந்து கொள்ள ஓரளவு முடியும்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை குறிப்பிடும் போது அது இப்போது தோன்றி இந்த காலத்தில் முடிந்தது என காலவரையறை சொன்னால் தான் கேட்பவர்களுக்கு சரியான முறையில் கிரகித்து கொள்ள வசதியாக இருக்கும். ஆனால் வேத காலத்தை பற்றி சொல்லும் போது அது எப்போது துவங்கியது. எப்போது முடிவுக்கு வந்தது என்று சொல்வதற்கு எந்த ஆதாரமும் இல்லை. வரலாற்று ஆய்வாளர்கள் எட்டிபார்க்க முடியாத மிக நீண்ட நெடிய காலத்திற்கு முன்பே வேதங்களின் காலம் துவங்கிவிட்டது என்று சொல்லலாம். இருப்பினும் ஒரு கணக்கு குறியீட்டுக்காக கி.மு. ஆறாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலத்தை வேதகாலம் என்று சொல்கிறார்கள். நான்கு வேதங்களில் முதன்மையானது ரிக்வேதம் என்று நமக்கு தெரியும். ரிக்வேதம் தோன்றி பல நூற்றாண்டுகளுக்கு பிறகு தான் மற்ற மூன்று வேதங்களும் தோன்றியிருக்கிறது. ஆனாலும் ஆச்சர்யம் என்னவென்றால் பல நூற்றாண்டுகளின் இடைவெளியில் வேதங்கள் தோன்றியிருந்தாலும் கூட அவற்றுகிடையில் மெல்லிய தொடர்ச்சி அவற்றை தனிதனியாக போகாமல் ஒருங்கிணைக்கிறது.



யோகி ஸ்ரீ ராமானந்த குரு

பொதுவாக வேதகால சமுதாயத்தை ஆர்ய நாகரீகம் என்ற பெயரிலேயே பலர் அழைக்கிறார்கள். நாமும் அப்படி அழைத்தால் ஒன்றும் குடி மூழ்கி போய்விடாது. ஆர்ய என்ற சொல்லிற்கு உயர்ந்த சிறந்த என்ற பொருட்கள் உண்டு. பொதுவாக சமஸ்கிருதத்தையும் அதை சார்ந்த மொழிகளையும் பேசும் மக்களை இந்தோ ஆரியர் என்று அழைப்பது வழக்கம். ஆரியர்கள் இந்தியாவிற்குள் எங்கிருந்து வந்தார்கள். எப்போது வந்தார்கள் என்ற குழப்பம் பல காலமாக இருந்து வருகிறது. காதல் கடவுளான மன்மதனை சிவபெருமான் நெற்றிகண் கொண்டு எரித்தாரா இல்லையாயென்று தொன்று தொட்டு லாவணி பாடல் இருந்து வருவது போல ஆரியர்கள் இந்தியாவின் பூர்வகுடிகள் என்று ஒரு சாராரும் அல்ல அல்ல அவர்கள் இந்த நாட்டின் வந்தேரிகள் என்று வேறொரு சாராரும் தொடர்ந்து வாதம் செய்து வருகிறார்கள். இந்தவாத பிரதிவாத சிக்கலுக்குள் மூக்கை நுழைத்து கொண்டு அவதிப்பட வேண்டிய அவசியம் இப்போது நமக்கு இல்லை. நாம் நேரடியாக அக்கால மக்களின் வாழ்க்கை எப்படியிருந்தது என ஆராய போய்விடலாம்.

வேதகால குடும்பங்களின் தலைவராக தந்தையே இருந்தார். ஒரு குடும்பத்தின் வரம்பற்ற அதிகாரம் அவருக்கே இருந்தது. திருமணம் முடிந்து குழந்தை குட்டிகள் பெற்ற பிறகும் ஒரு மகன் தந்தைக்கு அடங்கியனாகவே இருக்க வேண்டும். சமுதாயத்திற்கு தீங்கிழைத்த ஒரு மகனை தந்தை குருடாக்கியதாக ரிக் வேதத்தில் ஒரு சம்பவம் சொல்லப்படுகிறது. அதே போல சூதாடியான ஒருவனை குடும்பமே வெறுத்து ஒதுக்கியதாகவும் அந்த வேதம் சொல்கிறது. இக்கருத்துக்களின் அடிப்படையில் பார்க்கும் போது அக்கால சமுகத்தில் பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் இணக்கமான உறவு முறை இல்லையென்று சொல்ல முடியாது.

தந்தைக்கு பணிந்து நடப்பதை மரியாதை குறைவாக யாரும் கருதவில்லை. மேலும் குடும்பத்தில் ஏற்படும் நல்லது கெட்டதுகளை சமாளிக்க தலைக்கு தலை முடிவு எடுத்தால் சிக்கல்களே ஏற்படுமென்று ஒருவரையே முடிவு எடுக்க விட்டுவிட்டு மற்றவர்கள் சுற்று வேலைகளை கவனித்ததினால் குடும்பத்தின் நிலை என்பது குறைவில்லாத வண்ணமே இருந்தது. குடும்ப ஒற்றுமைக்கு குந்தகம் செய்போவரையும் கௌரவ குறைவாக நடப்பவர்களையும் தண்டிக்கும் நிலை இருந்ததே தவிர மற்றப்படி குடும்ப ஒற்றுமையில் பாச பிணைப்புகளே அதிகம் இருந்தற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. தகப்பனாரின் மறைவுக்கு பின்பு அவரின் அடுத்த சகோதரரோ அல்லது மூத்த மகனோ குடும்ப தலைவனாக ஆக்கப்பட்டிருக்கிறார். மிகபெரிய கூட்டு குடும்பங்களாகவே அக்காலத்தில் இருந்ததினால் நிலத்தின் மூலம் கிடைக்கும் வருவாயும் எல்லோருக்கும் சமமாகவே பங்கிடப்பட்டுள்ளது.

பருவ வயதை அடைந்த பிறகே பெண்களுக்கு திருமணம் நடந்திருக்கிறது. இக்காலத்தை போலவே அப்போதும் ஆண் குழந்தைகளையே அதிகம் விரும்பியிருக்கிறார்கள். ஆனால் பெண் குழந்தைகள் பிறந்துவிட்டால் கள்ளிபால் கொடுத்து சாகடிக்கும் கொடுமை அப்போது

www.aanmeegamalar.com




சுத்தமாக இல்லை என்றே சொல்லலாம். பிறந்த பெண் குழந்தைகள் பரிவும் பாசமும் காட்டி வளர்க்கப்பட்டு இருக்கிறார்கள்.

ஆணுக்கு நிகரான கல்வி பெண்களுக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. வேதகால கல்வி முறை கவிதை புணைபவர்களை மதிக்க தக்க முறையில் நடத்தி இருக்கிறது. சில வேத பாடல்களை ஆணுக்கு இணையாக பெண் கவிஞர்களும் புணைந்து இருக்கிறார்கள். ஆண் பெண் இருவருக்குமே போர்கலை கற்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ரிக்வேத காலத்தில் சமுகத்தில் ஆணுக்கு என்ன மரியாதை உண்டோ அதே மரியாதை பெண்ணுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. பெண் அடிமைதனம் இருந்ததற்கான ஆதாரம் ரிக்வேதத்தில் இல்லை.

ஆரிய பெண்கள் மிக கட்டாயமாக ஆரிய இளைஞர்களை தான் திருமணம் செய்ய வேண்டும் என்று நியதி இருந்ததே தவிர பெற்றோர்கள் பார்க்கும் மணமகனை தான் திருமணம் செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை காதல் திருமணத்திற்கு பெரிய எதிர்ப்புகள் இருந்ததற்கான சுவடுகள் இல்லை. தந்தைவழி உறவினர் சகோதர்களாக கருதப்பட்டதினால் உறவு முறைக்குள் திருமணம் செய்து கொள்வதை அவர்கள் விரும்பவில்லை.

பலதார மணமும் அப்போது வழக்கத்தில் இருந்தது தெரிகிறது. இருப்பினும் ஒருவனுக்கு ஒருத்தி என்கிற ஒழுக்க முறையே பலராலும் பின்பற்றப்பட்டது. ஆண்களுக்கு வழங்கப்பட்டிருந்த பலதார சலுகை பெண்களுக்கு இப்போது போலவே அப்போதும் வழங்கப்படவில்லை. ஆனாலும் கணவனை இழந்த இளம் பெண் கணவனின் சகோதரனோடு கூடி வாழ்வதை யாரும் குற்றமென கருதவில்லை. உடன்கட்டையேறும் பழக்கம் ரிக்வேத காலத்தில் எங்கும் காணப்படவில்லை.

வரதட்சனை கொடுக்க வேண்டிய அவசியம் அக்கால பெண்களுக்கு இல்லை. மணமகனே அதாவது வரனே முன் வந்து தட்சணை கொடுத்து பெண்ணை திருமணம் செய்து கொண்டான். மாப்பிள்ளை பணம் கொடுப்பதினால் தான் வரதட்சனை என்ற வார்த்தையே உருவாகி இருக்கிறது என்று பல அறிஞர்கள் சொல்கின்றன விருப்பம் இல்லாத பெண்ணை வலுகட்டாயமாக தூக்கி சென்று மண முடிக்கும் நிலையும் அப்போது இருந்திருக்கிறது. விமாதா என்பவன் பொருமித்ரா என்பவரின் மகளை இப்படி தூக்கி சென்று திருமணம் செய்ததாக ரிக்வேதம் சொல்கிறது. இத்தகைய திருமண முறைக்கு காந்தர்வ ராட்சஸ திருமணம் என்று ரிக்வேதம் பெயர் சூட்டுகிறது.

ரிக்வேதம் பத்தாம் அத்தியாயம் எண்பத்தி ஐந்தாவது பாடல் ஒரு மண விழாவை அழகுற வர்ணிப்பதை சற்று பார்ப்போம். மணமகன் வீட்டார் ஊர்வலமாக கிளம்பி மணப்பெண்ணின் வீட்டை சென்றடைகிறார்கள். அங்கு அலங்கரிக்கப்பட்டு புதிய கணவனின் வருகைக்காக பெண் காத்து இருக்கிறாள். பெண் வீட்டார் பிள்ளைவீட்டாரை வரவேற்று உபசரித்து உட்கார வைக்கிறார்கள் அனைவருக்கும் விருந்து பரிமாரப்படுகிறது. விருந்து முடிந்த பிறகே திருமண சடங்குகள் ஆரம்பிக்கின்றன. மணமகனின் கைகளில் வயதில் மூத்தவர் பெண்ணின் கையை பிடித்து ஒப்படைக்கிறார். மணமக்கள் நெருப்பை வலம் வந்து அனைவரிடமும் ஆசிர்வாதம் பெறுகிறார்கள். இத்தோடு சடங்குகள் முடிவுக்கு வருகிறது.

இங்கு மிக முக்கியமான விஷயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். திருமணம் முடித்து வைக்க புரோகிதர்கள் யாரும் இருப்பதாகவோ மந்திர முழக்கம் செய்வதாகவோ வேதத்தில் குறிப்பு இல்லை. இது மட்டுமல்ல மணமகன் மணமகளுக்கு திருமாங்கல்யாணம் பூட்டுவதாக கூட வேதம் சொல்லவில்லை. எனவே வேதகால திருமணம் என்பது இப்போதைய வைதீக திருமணங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டு எளிமையாகவே இருந்து இருக்கிறது. காலபோக்கில் தான் திருமண சடங்குகளின் எண்ணிக்கை அதிகரித்து இருக்கிறது. திருமண சடங்குகளை போலவே உபநயனம் விஷயத்திலும் அக்காலத்தில் மாறுபட்ட நடைமுறையே இருந்திருக்கிறது. தாலிகட்டும் முறை எப்படி பிற்காலத்தில் ஏற்பட்டதோ அப்படியே உபநயன சடங்கும் பிற்காலத்தில் தான் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதற்கு வேதங்களில் வலுவான ஆதாரங்கள் உண்டு...

யோகி ஸ்ரீ ராமானந்த குரு

மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434

www.aanmeegamalar.com

# அமைதியையும் நல்லெண்ணத்தையும் பரப்புங்கள்

குருதேவர் அருளுகிறார்:

“கிட்டத்தட்ட இரண்டு வகை மனிதர்களே இருக்கின்றனர். உலகத்தில் என்ன குறை உள்ளது என்பதைப்பற்றி தொடர்ந்து புலம்பிக் கொண்டிருப்பவர்கள் மற்றும் வாழ்க்கையின் இன்னல்களை கண்டு எள்ளி நகையாடி எப்பொ ழுதும் அவர்களுடைய சிந்தனையில் ஆக்கபூர்வமாக இருப்பவர்கள். ஏன் எல்லாவற்றையும் இத்தனை தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும்? ஒவ்வொருவரும் அதிக ஆக்கபூர்வமானவராகவும் அதிக இணக்கமுள்ளவராகவும் இருந்தால், இந்த உலகம் எவ்வளவு அற்புதமாக இருக்கும்!”

“நாககீம் என்னும் வனத்தில், நவீன வாழ்க்கையின் இறுக்கத்தில் சோதனை அடங்கி உள்ளது. நீங்கள் கொடுப்பது எதுவாயினும், உங்களிடமே திரும்பிவந்து சேரும். வெறுத்தால், பதிலுக்கு நீங்கள் வெறுப்பைப் பெறுவீர்கள். இணக்கமற்ற எண்ணங்களாலும், உணர்ச்சிகளாலும் நீங்கள் உங்களை நிறைத்துக்கொண்டால் நீங்கள் உங்களையே அழித்துக்கொள்வீர்கள். ஏன் எவரிடமும் வெறுப்போ அல்லது கோபமோ கொள்ள வேண்டும்? உங்களுடைய எதிரிகளையும் நேசியுங்கள். கோபக்கனலில் ஏன் மனம் புழுங்குகிறீர்கள்? நீங்கள் கோபவசப்பட்டால், உடன் அதனிடமிருந்து மீண்டு விடுங்கள். வெளியே நடந்து செல்லுங்கள். பத்து முதல் பதினைந்து வரை எண்ணுங்கள். அல்லது உங்களுடைய மனதை இனிமையான எதன்மீதாவது திருப்புங்கள். பழிவாங்கும் ஆசையை விட்டுவிடுங்கள். நீங்கள் கோபமாக இருக்கும்பொழுது அதிக சூடடைகிறது. உங்களுடைய இதயத்தில் வால்வு தொந்தரவு உண்டாகிறது. உங்களுடைய முழு தேகமும் உயிர்ச் சக்தியற்றதாகிறது. அமைதியையும் நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்துங்கள். ஏனெனில் அதுதான் உங்களுக்குள் உள்ள இறை பிரதிபிம்பத்தின் இயல்பாகும். உங்களுடைய உண்மையான இயல்பு. பின்னர் எவரும் உங்களைத் தொந்தரவு செய்ய முடியாது.”

**ஆன்மா ஆணையிடும்பொழுது மனம் கீழ்ப்படிகிறது.**

“நீங்கள் இறைவனின் பிரதிபிம்பத்தில்தான் படைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்வதற்கு, நீங்கள் அச்சத்திற்கும் கோபத்திற்கும் அப்பாற்பட்டு, அதிகமாக உணர்ச்சிவசப்படும் தன்மையை ஒழிக்கவேண்டும். அலட்டிக்கொள்ளாதீர்கள். உங்களிடமே சொல்லிக்கொள்ளுங்கள்: “இன்று நான் படுக்கையில் உறங்குகிறேன் நாளை தரையின்மீது உறங்குவேன்.” இந்த மனநடுநிலையை பழகுங்கள். மனதானது நீங்கள் அதற்கு எதை சொல் கிறீர்களோ, அதையே மிகச் சரியாகச் செய்யும். மனம் மிகவும் தந்திரமானது. ஆனால் நீங்கள் அதைப் பழகினால், அது நம் சொற்படி நடக்கும். நீங்கள், “என்னால் மாட்டிறைச்சி இன்றி வாழ முடியாது,” எனக் கூறினால், மனம் எதிரொலிக்கும், “என்னால் மாட்டிறைச்சி இன்றி வாழ முடியாது.” ஆனால் நீங்கள் ஆன்மா ஆனவர்,



"அடிமைத்தனமே, ஒழிந்துபோ!" என ஆணையிட்டால் மனம் கீழ்படியும். எனவே தேகம் அல்லது மனதின் வேலையாளாக இருக்கவேண்டாம். புலன் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதுதான் அமைதிக்கும் ஆனந்தத்திற்குமான ஒரே வழி. சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும் சரி, எல்லா மன உணர்ச்சி வசப்படுதலிலிருந்தும் அப்பாற்பட்டு இருந்து உங்களை உண்மையாகவே என்றும் நீடித்திருக்கும் ஆனந்தம் உள்ளவராக ஆக்கிக்கொள்ளுங்கள்.

யோகப்பயிற்சியால் எப்பொழுது சித்தம் நன்கடங்கி அமைதி பெறுகிறதோ, மேலும் எப்பொழுது ஆத்மாவால் ஆத்மாவைக் கண்டு ஆத்மாவில் மகிழ்ச்சியுறுகிறதோ:

இந்திரியங்களுக்கு எட்டாததும், புத்தியினால் கிரகிக்கப்படுவதும், முடிவில்லாததுமாகிய எந்த சுகத்தை யோகி அறிகிறானோ, எதில் நிலைத்தபின் ஆத்மசொரூபத்தினின்று அவன் அசைவதில்லையோ;

எதை அடைந்து அதிலும் மிக்கதொரு வேறு லாபத்தை நினைப்பதில்லையோ, எதில் நிலைத்திருந்து பெருந்துக்கத்தாலும் அசைக்கப்படுவதில்லையோ;

துக்கத்தின் சேர்க்கையிலிருந்து பிரிந்துகொள்ளுதலே யோகம் என்பபடுவதாகத் தெரிந்துகொள்க; தளரா நெஞ்சத்துடன், உறுதியாகத் தொடர்ந்து அந்த யோகத்தைப் பயில்க. (பகவத் கீதை 6 ஸ்லோகம் 20, 23)

## உள்ளுணர்வுதான் குணத்தைக் கணிக்கும் நிச்சயமான நீதிபதி

ப்ரிய குருதேவர் அருளுகிறார்: "கண்கள், உணர்ச்சிகள் மற்றும் தேக லட்சணங்கள் இவைகளை ஆராய்தல் மூலம், ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி ஒரு சுவராஸ்யமான குண ஆராய்சி சாத்தியம் என்றாலும் குணத்தைப்பற்றி அறிவதற்கு மிகச்சிறந்த மற்றும் மிக உயர்ந்த வழி ஆன்ம உள்ளுணர்வு மூலமே. உங்கள் மனதும் உணர்ச்சியும் பூரணமாக அமைதியில் ஆழ்ந்திருக்குமானால் நீங்கள் சந்திக்கும் ஒவ்வொரு நபரின் இயல்பையும் உள்ளுணர்வு பூர்வமாகவும் துல்லியமாகவும் நீங்கள் உணர முடியும்."

அவர் கூறுகிறார்: "எனது பணியானது எல்லாவகை மனிதர்களையும் பயிற்சிக்காகவும் மற்றும் உதவிக்காகவும் சேர்த்துகொள்வதுதான். எந்த ஒரு மனிதரின் சாத்தியக்கூறுகளையும் ஒரு குறிப்பிட்ட ஆராய்ச்சிக்குள் உட்படுத்தி, அவர் மீது



குருப்ரியா

ஓர் எல்லையை நிர்ணயிப்பது நல்லதல்ல. ஆனால் அவர் மாறுகிறாரா அல்லது அப்படியே இருக்கிறாரா என்பதை அவரது சுபாவம் எப்படியிருந்தாலும் கண்கள், உணர்ச்சிகள் அல்லது தேக அமைப்புகள் பற்றிய உங்கள் ஆய்வை விட உள்ளுணர்வு உங்களுக்கு அதிகம் தெரிவிக்க இயலும். உள்ளுணர்வுதான் மிகச்சிறந்த ஆராய்வு சக்தி. ஒரு கண்ணாடி அதன்முன் வைத்திருக்கும் எல்லாப் பொருட்களையும் பிரதிபலிப்பதுபோல் உங்கள் மனக்கண்ணாடி அமைதியாய் இருக்கும்பொழுது, மற்றவர்களது உண்மையான குணம் அதில் பிரதிபலிக்கப்படுவதை நீங்கள் காணமுடியும். அமைதியாகவும் ஆழ்ந்த சிந்தனையிலும் இருந்துகொண்டு, நீங்கள் எல்லோருக்கும் நன்மை புரிந்து கொண்டிருப்பதில், தீவிரமாக இருந்தால் உங்களிடம் வரும் எவருடைய உண்மையான குணமும் உங்களுக்கு வெளிப்படுத்தப்படும்."

## சம்பிரதாயத்தால் அல்லாது அறிவால் வழிநடத்தப்படுங்கள்.

ப்ரிய குருதேவர் அருளுகிறார்: "ஒரு மனிதரை மற்றொருவரிடமிருந்து வித்தியாசமாக செயற்படச் செய்வது எது? வாழ்தல், செயல் புரிதல் மற்றும் சிந்தித்தல் ஆகிய பழக்கங்கள்; சூழ்நிலை மற்றும் தேசிய பழக்கங்கள். இவற்றில் பின்னர் கூறப்பட்ட விஷயத்தில் , பழக்கங்கள் நம்மீது திணிக்கப்படுகின்றன. நான் எனது சொந்த வழிகளையே பின்பற்றுகிறேன். 1920 ல் நான் அமெரிக்காவிற்குப் புறப்பட்டபோது எனக்கு ஒரு நீளமான தாடி இருந்தது. தாடியுடன் உள்ள ஆண்கள் அதிக வணக்கத்திற்குரியவர்களாகத் தோற்றமளிப்பார்களென நீங்கள் எண்ணக்கூடும்; இக்காரணத்திற்காகவே தாடிகள் இந்தியாவில் உயர்வாக மதிக்கப்படுகின்றன. ஆனால் நான் இன்னும் கப்பலில் இருந்தபோதே, அமெரிக்கர்கள் நீண்ட தாடியுள்ள ஒருவரைக்கண்டால், "வனத்திலிருந்து வந்த ஒரு காட்டு மனிதன் அதோ செல்கிறான்!" எனக் குறிப்பிடும் மனச் சார்பு உடையர்வகள் என நம்ப வைக்க மாட்டேன்."

"அமெரிக்க ஆண்களில் வெகு சிலரே தாடி வைத்திருப்பதை நான் புரிந்து கொண்டதும், எனது தாடியை அகற்றிவிட இசைந்தேன் ; ஆனாலும் எனது குருவாகிய ஸ்ரீ யுக்தேஸ்வர் தனது தலைமுடியை நீளமாக வைத்திருந்ததால், நான் என் தலைமுடியை நீளமாக வைத்துக்கொள்ள உறுதிகொண்டேன். எனவே எனது தலைமுடியைக் குட்டையாக வெட்டிக்கொள்ளும்படி எவராலும் என்னில் தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை. எனது நீண்ட தலைமுடியை

104

பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

www.aanmeegamalar.com



www.aanmeegamalar.com

நான் இப்போது வெட்டிவேனானால் பல வருடங்களுக்குமுன் அதன் நீளத்தைப் பரிகாசம் செய்த அதே மக்கள் குட்டையான தலைமுடியை வைத்திருப்பதனால் என்னைக்கண்டு சிரிப்பதுடன் அக மனிதனின் மகிமையும்கூட குறைந்துவிட்டதாகவும் உணர்வார்கள். "

"எது சரி அல்லது உண்மை என நமக்கு நிஜமாகவே தெரியாது. ஏனெனில் புறத்தோற்றங்களின் அடிப்படையிலேயே நாம் எப்போதும் பொருட்களை ஒப்பீடு செய்கிறோம். ஆகவே நமது கணிப்புகளில் நாம் பெரும்பாலும் தவறாகவே உள்ளோம். எது சரியென்றும் எது தவறென்றும் வெறுமனே தோற்றத்தை அடிப் படையாகக்கொண்டு எவரால் சொல்ல முடியும்?"

"நீங்கள் படிப்படியாக எந்தவொரு பழக்கத்தின் அடிமைத்தனத்திலிருந்தும், அது உடையோ அல்லது உணவோ அல்லது வேறு எது சம்பந்தப்பட்டதானாலும், உங்களை விடுவித்துக்கொள்ள ஒரு முயற்சி எடுக்க வேண்டும். அநேகர் , ஒரு நாளின் மூன்று வேளைகளிலும் புலால் உண்ணவேண்டுமென நினைக்கின்றனர். மற்றவர்கள் கீரை வகை மற்றும் கொட்டைகளைத் தவிர வேறு எதையும் உண்ணக்கூடாது என்றும், தங்களுடைய உணவு முறையை மாற்றினால் தாம் நோய்வாய்ப்படுவோம் என்றும் நம்புகின்றனர். இப்படிப்பட்ட நம்பிக்கைகள் அடிமைத்தனத்தின் ஒரு வடிவமாகும். எந்த ஒரு வாழ்க்கைப் பழக்கத்தினாலும் கட்டுப்பட உங்களை அனுமதிக்காமல், மாறாக உங்களுடைய அறிவின் கட்டளைகளுக்கு ஏற்ப உங்கள் பழக்கங்களை மாற்றிக்கொள்ள வல்லவர்களாக இருக்க வேண்டும். அறிவினால் வழி நடத்தப்பட்டு சுதந்திர விருப்ப சக்தியை உபயோகித்து நியாயமாக வாழ கற்றுக் கொள்ளுங்கள். ஓர் இரவு மென்மையான மெத்தையில் சுகமாகவும், மறு இரவு அதே சுகத்துடன் தரையிலும் உறங்க வல்லவர்களாக இருங்கள். பழக்கத்திற்கு ஆளாகாத அந்த தெய்வீகப் பற்றின்மைதான் இந்தியாவின் குருமார்களால் பரிந்துரைக்கப்படும் சுதந்திரமாகும்.

## உண்மையான சுதந்திரத்திற்கு எதிராக விருப்ப சுதந்திரம்

குருதேவர் தொடர்கிறார்: "மேற்கில் உள்ள அநேகர் வேறு வகையான சுதந்திரத்தில் நம்பிக்கைகொண்டுள்ளனர். அதை நான் விருப்ப சுதந்திரம் எனக் கூறுகின்றேன். சுதந்திரத்தின் உண்மையான இயல்பைப் பற்றிய தவறான கருத்தால் சில பெற்றோர்கள் தமது குழந்தைகளுடைய ஆசைகளுக்கு விவேகமின்றி விட்டுக் கொடுத்து அவர் களை வாழ்நாள் முழுவதும் பழக்க அடிமை ளாகச் செய்கின்றனர். தமது ஆசைகள் பூர்த்தி யானால்தான் சந்தோஷமாக இருப்போம் என்றும், ஆசைகளை பூர்த்தி செய்வதே வாழ் வின் நோக்கம் என்றும் எண்ணி, குழந்தை வளர்கின்றது. பின்னர், தான் தவறுதலாக வழிநடத்தப்பட்டுள்ளதை அவன் அறிகிறான்; தான் வீட்டில் கண்டதைவிட வெளியுலகு அதிக வித்தியாசமாக உள்ளதையும் அறிகிறான். மனதில் எழும் ஒவ்வொரு விருப்பத்தையும் பூர்த்தி செய்வது உலகில் அவ்வளவு சுலபமானதல்ல! தனது சொந்த நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக மற்றவர்கள் அவனை இங்குமங்கும் அலையவைக்கக்கூடும். அவனும் தனது விருப்பங்களையும் ஆசைகளையும் திருப்திப்படுத்துவதற்காக இரக்க மற்றவனாக மாறிவிடுகிறான். "காம நுகர்ச்சியே அனைத்திலும் மேலானதாகவும், இவ்வுலகம்தான் 'எல்லாமும்' , மற்றொன்றுமில்லை என்று தீர்மானம் செய்தவர்களாய் சாகும் வரையில் அளவு கடந்த கவலையை உடையவர்களாய் இருக்கின்றனர்." (பகவத் கீதை அத் 16 ஸ்லோகம் 11)

"பெற்றோர்கள், தமது குழந்தைகள் திடமான மன உறுதியையும் விவேகத்தையும் பெற்றிருக்குமாறு தயார் செய்ய முயலவேண்டும். ஆதலால் உலகில் அவர்கள் தமது பாதை யை அமைத்துக்கொள்ளவும், அதே சமயம் அதன் கெட்ட பழக்கங்களிலிருந்து ஒதுங்கி இருக்கவும் முடியும். எப்படி உண்மையான சுதந்திரத்துடன் இருப்பது என குழந்தைகளுக்குக் கற்பியுங்கள். தமது உடலுக்கும் விரும்பத்தகாத பழக்கங்களுக்கும் அடிமைப்பட குழந்தைகளை அனுமதிக்காதீர்கள். தினசரி பழக்கங்களில் தவறாமல் இருப்பதற்கு குழந்தைக்குப் பயிற்சி அளிப்பது நல்லது. ஆனால் அவன் மனச் சமநிலையுடன் இருக்கவும் பயிற்று விக்கப்படவேண்டும். உரிய நேரத்தில் நித்திரைக்குச் செல்வது மிகவும் சரியே. அப்படி யில்லாவிட்டாலும் சரியே. குறித்த நேரத்தில் உணவு அருந்தினால் நன்று. குறித்த நேரத்தில் உணவு அருந்தாவிட்டாலும் நன்றே. குழந்தைகள் மற்றவர்களின் உரிமைகளை மதிப்பதற்கு கற்பிக்கப்படவேண்டும். ஆனால் எதற்கோ அல்லது எவருக்கோ கட்டுப்பட்ட பழக்க அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டிருப்பதற்கும் கற்பிக்கப்பட வேண்டும்.

## 'முடியாது'என்ற சக்தியால் தீயப் பழக்கங்களுடன் போராடுங்கள்

குருதேவர் அருளுகிறார்: "ஒருகோவேறு கழுதை ஒத்தாசையுடன் இருக்க விரும்பியுள்ள போது, அது மிகவும் கீழ்படிகின்றது. ஆனால் ஒத்துழைப்பதை நிறுத்த வேண்டும் எனத் தீர்மானித்தவுடன் எவராலும் அதை அசைக்க முடியாது. அவ்வகையான 'முடியாது' எனும் சக்தியை நீங்கள் விருத்திசெய்யவேண்டும். உங்களுடைய மனநிலைகள் மற்றும் பழக்கங்களின் எஜமானனாக இருங்கள். அதன் பின்பு தவறான ஒரு காரியத்தைச் செய்வதில்லை என உங்களுடைய மனதைத் திடப்படுத்தியதும், உங்களுடைய விருப்பத்திற்கு எதிராகச்

செய்யவைக்க ஒருவராலும் முடியாது. இருப்பினும் வேறு சந்தர்ப்பங்களில் நீங்கள் தவறாக உள்ளதைக் கண்டதும், உங்களுடைய மனதை விரைவாக மாற்ற வல்லவராக, ஆகுங்கள். பழக்கத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட உங்களை நீங்கள் அனுமதிக்காமல், அறிவினால் வழிநடத்தப்படும் சுதந்திர விருப்பத்தால் செயல்படும்போது, இந்த வளைந்துகொடுக்கும் தன்மை வருகின்றது. சுதந்திரமாய் இருங்கள்! நல்ல பழக்கங்களுக்கும்கூட அடிமையாக இருக்கிறீர்கள்; நல்லதை அதன் சொந்த நன்மைக்காகவே செய்யுங்கள்."

"சிலருக்கு, அவர்களுடைய தினசரி கடமைகள் பெருமளவிற்கு ஒரே மாதிரியாக இருப்பினும், அவர்கள் என்ன செய்யவேண்டும் என தினமும் சொல்லப்பட வேண்டும். ஆனால் சாதாரணமாக மக்கள் வழக்கமான தினசரி வேலைகள் ஒரு பழக்கம்போல் செய்கின்றனர். அவர்கள் நல்ல பழக்கங்களை வளர்த்துகொண்டிருந்தால், இது நல்லதே. ஆனால் தீயப்பழக்கங்களை பின்பற்றுவோர்களுக்கு இது துரதிர்ஷ்டமாகும். அனேகர் இரண்டும் கலந்த சேர்க்கைகளைப் பெற்றிருக்கின்றனர்."

## இறைவனின் குரலுக்கு மட்டும் செவி சாயுங்கள்.

ப்ரிய குருதேவர் தொடர்கிறார்: "முடிவாகப் பார்க்குமிடத்து, சாத்தான் கூட உண்மையில் இறைவனின் ஒரு கருவியே . மனிதனுக்கு அளித்துள்ள தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற சாத்தான் தவறுகின்றான். இதைத் தொடர்ந்து, ஏமாற்றமடைந்த மனிதன் விசுவாசமுள்ள இறைவனை நாடுகிறான். ஏமாற்றத்திற்காக ஏன் காத்திருக்கவேண்டும்? உங்களுடைய மகிழ்ச்சியின் அனைத்து முட்டைகளையும் ஒரே கூடையில் போட வேண்டாமென நான் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன். நீங்கள் உடல் ரீதியாக வலிமையுடனும், ஆரோக்கியத்துடனும், நியாயமான மனதிருப்தியுடனும் இருக்கும்போது திடீரென ஒரு வலி ஏற்படுகின்றது. அப்போது 'அடக் கடவுளே, இது என்ன?' என்று நினைக்கிறீர்கள். மகிழ்சசிக்கான உங்களுடைய எல்லா எதிர்பார்ப்புகளையும், உங்களுடைய பலவீனமான இந்தத் தேகக்கூடையிலும், இவ்வுலக இன்பங்களிலும் போடவேண்டாமென ஸெல்ஃப் ரியலைசேஷன் ஃபெலோஷிப் (யோகதா சத்சங்க சொஸைடி ஆஃப் இந்தியா) உங்களுக்குக் கற்பிக்கின்றது எவ்வாறு? தேகத்தை வெல்ல போதிப்பதன் மூலமும் எல்லாவற்றிற்கும் மேலாக, தியானம் செய்தவற்கு போதிப்பதன் மூலமும்."

"உங்களுடைய நல்ல எண்ணங்கள் வாயிலாக இறைவனின் குரலுக்கு செவிசாயுங்கள். இறைவனும் அவனுடைய தெய்வ குணமுள்ள ஆன்மாக்களும் இந்த நல்ல எண்ணங்களை உண்டாக்குகின்றனர்; சாத்தான், தனது சொந்த இயல்புக்கேற்ற எண்ணங்களை உண்டாக்குகிறது. கெட்ட எண்ணம் தோன்றும் ஒவ்வொரு முறையும் அதை அகற்றி விடுங்கள். அப்போது சாத்தான் உங்களை எதுவும் செய்ய முடியாது. ஆனால் நீங்கள் தவறாக எண்ணிய உடனே, நீங்கள்தான் சாத்தானை நோக்கிச் செல்கின்றீர்கள். நீங்கள் நல்லவற்றிற்கும் தீயவற்றிற்கும் இடையே ஊசலாடியவண்ணம் உள்ளீர்கள். இவற்றிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு நீங்கள் சாத்தான் உங்களை அணுக முடியாத இடத்திற்கு, இறைவனின் இதயத்தின் ஆழத்திற்குச் செல்ல வேண்டும்."

உங்கள் பகைவர்களிடம் அன்பு செலுத்துங்கள்

குருதேவர் அருளுகிறார்: "உங்களுடைய பழைய எதிரி ஒருவர் இறந்துவிட்ட போதிலும், நீங்கள் அவரிடத்திலுள்ள வெறுப்பை தொடர்ந்து உணருகிறீர்கள் என வைத்துக் கொள்வோம். அந்தக் கசப்புணர்வு காலப்போக்கில் உங்களுடைய தேகத்திலும் மனதிலும் தீய விளைவுகளை ஏற்படுத்தும். உங்கள் எதிரியினுள்ளும் இறைவனைக்காண முயன்றுகொண்டிருப்பதில் கவனம் செலுத்துவது மேலானது. ஏனென்றால் இப்படிச் செய்வதால் உங்கள் மன அமைதியை அழிக்கும் தீய பழிவாங்கும் ஆசைகளிலிருந்து வெறுப்பின்மேல் வெறுப்பைக்குவிப்பதாலோ அல்லது வெறுப்பிற்குப்பதில் வெறுப்பைக் கொடுப்பதாலோ நீங்கள் எதிரிக்கு உங்களிடமுள்ள விரோதத்தை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், உங்கள் சொந்த நச்சுத்தன்மையால் தேகரீதியாகவும், உணர்ச்சி ரீதியாகவும் உங்கள் சொந்த கட்டமை ப்பையே நச்சுத் தன்மை அடையச்செய்கிறீர்கள்."

நச்சுத்தன்மையுடைய மனம்படைத்தவர்களாக இல்லாமல், பகைவர்களிடம் கூட அன்பு உள்ளம் கொண்டவராக இருக்க குருதேவர் அறிவுறுத்துகிறார்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com

இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து படிக்கலாம்

# அறிய வேண்டிய

# சாஸ்திரங்கள்

- ☯ கிழக்கு நோக்கிச் சாப்பிட ஆயுள்வளரும். தெற்கு நோக்கிச் சாப்பிட புகழ் உண்டாகும். மேற்கு நோக்கிச் சாப்பிட செல்வம் வளரும். வடக்கு நோக்கிச் சாப்பிடக் கூடாது
- ☯ பித்ருக்களின் திதியன்று வீட்டில் அன்ன தானம் செய்ய முடியாவிட்டால் உணவு விடுதியில் (ஹோட்டல்) பத்துடோக்கன் வாங்கி ஏழைகளிடம் கொடுத்து உண்ணச் செய்யலாம். அவர்களிடம் பணமாகக் கொடுக்கக் கூடாது.
- ☯ அன்னத்தால் பிராணனையும் பிராணனால் பலத்தை யும் பலத்தால் தவத் தையும் தவத்தால் சிரத்தையையும் சிரத்தையால் புத்தியையும்மனத் தால் சாந்தியால் சித்தத்தையும் சித்தத் தால் நினைவால் ஸ்திதப் பிரக்ஞையால் விஞ்ஞா னத்தையும் விஞ்ஞானத்தால் ஆத்மாவையும் பெறுவதால் அன்னத்தைக் கொடுப்பது இவை எல்லாவற்றையும் கொடுத் தாகிறது. ஏன தைத்ரீயோபநிஷத் கூறுகிறது.எனவே முடிந்த போது முடிந்த அளவிற்கு அன்ன தானம் செய்யுங்கள்.



- ☯ அளவிற்கு அதிகமாக உண்டால் நோய்வரும். ஆயுள் குறையும். எனவே வயிறு புடைக்க மூச்சு முட்ட உண்ணக் கூடாது.
- ☯ பசிக்கும் போது தான் சாப்பிட வேண்டும்.
- ☯ மிளகு சேர்ப்பதால் உணவில் உள்ள விஷம் நீங்குகிறது. உடலில் உள்ள விஷமும் முறிகி றது.
- ☯ உணவில் சீரகம் (சீர் அகம்) சேர்ப்பதால் உடம்பை சீராக வைப்பது மட்டும் அல்லாமல் குளிர்ச்சியை தருகிறது.
- ☯ வெந்தயம் உஷ்ணத்தைக் குறைக்கிறது. வெந்தயத்தை இரவே தண்ணீரில் ஊற வைத்து காலை எழுந்தவுடன் தண்ணீருடன் பருகி வந்தால் உடம்பில் உள்ள உஷ்ணத்தை குறைக்கிறது.
- ☯ கடுகு உடலில் உள்ள உஷ்ணத்தை ஒரே அளவாக வைக்கிறது.
- ☯ இஞ்சியை உணவில் சேர்ப்பதால் பித்தம் தலை சுற்றல் வாந்தி போன்ற கோளாறுகள் வருவதில்லை.
- ☯ உணவு உண்பதற்கு முன்பு கை கால் வாய் போன்றவற்றை நீரால் கழுவ வேண்டும்.
- ☯ காலில் ஈரம் உலர்வதற்கு முன்பே உணவு உண்ணத் தொடங்க வேண்டும்.
- ☯ உணவு உண்ணும் போது பேசக் கூடாது. படிக்கக் கூடாது. இடதுகையை கீழே ஊன் றக் கூடாது
- ☯ வீட்டில் கதவை திறந்து வைத்துக் கொண்டு வாசலுக்கு எதிரே அமர்ந்து உண்ணக் கூடாது.
- ☯ காலணி அணிந்துக் கொண்டு உண்ணக் கூடாது.

- சூரிய உதயத்திலும் மறையும் பொழுதும் உண்ணக் கூடாது.
- உணவு உண்ணும் போது உண்பதில் கவன மாக இருக்க வேண்டும்.
- நிலவின் ஒளியில் உண்ணக் கூடாது. பௌர்ணமியில் நிலாச் சாப்பாடு தனியாகச் சாப்பிடக் கூடாது. பலருடன் சேர்ந்து சாப்பிட லாம்.
- இருட்டிலோ நிழற்படும் இடங்களிலோ உண் ணக் கூடாது.
- சாப்பிடும் பொழுது நடுவில் எழுந்து சென்று மீண்டும் வந்து சாப்பிடக் கூடாது. நின்று கொண்டு சாப்பிடக் கூடாது.
- அதிக கோபத்துடன் உணவு உண்ணக் கூடாது.
- சாப்பிடும் போது தட்டினைக் கையில் எடுத் துக் கொண்டு உண்ணக் கூடாது. தட்டை மடியில் வைத்துக் கொண்டும் படுத்துக் கொண்டும் உண்ணக் கூடாது.
- இலையைத் துடைத்து வலித்துச் சாப்பிடு வதும் விரலில் ஒட்டி உள்ளதை சப்பிச் சாப்பிடுவதும் தரித்திரத்தை வளர்க்கும்;.
- வெங்கலம் அலுமினியம் மற்றும் செம்பு பாத்திரங்களில் சமையல் செய்யக் கூடாது.
- புரச இலையில் சாப்பிட்டால் புத்தி வளரும்.
- வெள்ளித் தட்டில் இலையில் சாப்பிட்டால் நல்ல அழகு அறிவு மன ஒருமைப்பாடு குடும்ப ஒற்றுமை கிடைக்கும்.
- நாம் சாப்பிட்ட தட்டுக்களை வைத்து சாப்பாட்டையோ அல்லது மற்ற உணவுப் பதார்த்தங்களையோ மூடி வைக்கக் கூடாது.
- இரவில் இஞ்சி, கீரை, பாகற்காய், கஞ்சி, தயிர், நெல்லிக்காய்;ஆகியவற்றை சேர்க்கக் கூடாது.
- உண்ணும் தட்டில் அல்லது இலையில் முதலில் காய்கறிகளோ அப்பளமோ பரிமாறாமல் சாதத்தை பரிமாறக் கூடாது.
- அதே போல் முதலில் கீரையோ வத்தலோ இலையில் வைக்கக் கூடாது. அசுப காரியத் தில் மட்டுமே பயன்படுத்துவர்.

## வாழ்வில்

## நாம் செய்யக் கூடாதவை

- நம்மை விடப் பெரியவர்கள் முன் கால் மேல் கால் போட்டு அமரக் கூடாது.
- செவ்வாய், வெள்ளி ஆகிய இரு நாட்களிலும் தலைமுடி வெட்டுதல் நகம் வெட்டுதல் சவரம் செய்து கொள்ளுதல் கூடாது.
- தலைமுடிக்கு மந்திரங்களை எளிதில் கிரகிக் கும் தன்மை உண்டு. தலைமுடியைக் கொண்டு பில்லி சூனிய ஏவல் வைக்கவும் செய்வர். எனவே தலைமுடியையும் நகத்தை யும் எக்காரணம் கொண்டும் பிறர் பார்க்கும் படி வெளியில் எறியலாகாது.
- நான்காம் பிறைச் சந்திரனைப் பார்க்கக் கூடாது.
- செப்புப் பாத்திரத்தில் பாலை வைக்கக் கூடாது. பால் திரிந்து விடும். அதிக உப்பு அதிக காரம் அதிக இனிப்பு அதிக புளிப்பு சேர்க்கக் கூடாது. காளானைக் கர்ப்பிணிப் பெண்கள் சாப்பிடக் கூடாது.
- பட்டு வேட்டி மற்றும் புடவைகளை அணிந்துக் கொண்டு வைதீக காரியங்களைச் செய்யக் கூடாது.
- கர்பிணி பெண்கள் மாலை வேளையில் சாப்பிடக் கூடாது.
- மருந்து மாத்திரை ஆகியவற்றை முகர்ந்து பார்க்கக் கூடாது.
- பெருமூச்சு விடுவது மிகப் பெரும் தவறு அதனால் துன்பங்கள் தான் அதிகரிக்கும் பெருமூச்சு விடுபவரின் மூச்சுக் காற்று அருகில் உள்ளவர் மேல் படக் கூடாது. பட்டால் அவருக்கும் கெடுதல் ஏற்படும்.
- இலவசமாக யாரிடமும் எள் பெறக் கூடாது.
- நமக்கு ஒருவர் இட்ட உணவைப் பழிக்கக் கூடாது.
- வீட்டில் எலுமிச்சை மூடியில் விளக்கேற்றக் கூடாது.
- விளக்கில் அல்லது நெருப் பில் தீப்பற்றிய துணியை மீண்டும் உடுத்திக் கொள்ளக் கூடாது.
- விளக்கு வைத்த பிறகு தலை வாருதல் முகம் கழுவுதல் பேன் எடுத்தல் போன்ற வற்றைச் செய் ய க் கூடாது.
- வெள்ளிக்கிழமை அரிசி புடைப்பது அரிசி வறுப்பது கூடாது. மிளகாய் வறுப்பது மிளகாய் பொடி அரைப்பது கூடாது.



# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க

# aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்













# சித்திரை 2021 பிலவ வருட ராசிபலன்கள்

ஜோதிடர் ஜெய் ஸ்ரீராம்
DME.,BA.,MA.,(ASTROLOGY)
மயிலாடுதுறை CELL
9487215736

## மேஷம்:

குடும்ப உறவுகளிடையே விட்டுக்கொடுத்து போவது நன்மையைதரும். கோபத்தையும் அவசர முடிவுகளையும் தவிர்ப்பது நல்லது. இந்த ஆண்டு பொருளாதார வரவு சீராக இருக்கும். கடன் பிரச்சனைகள் குறையும். தொழிலில் அதிக கவனம் செலுத்த வேண்டும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். வெளிநாடு வேலை வாய்புகள் கிடைக்கும். நெருக்கடிகள் குறையும். செலவுகளை குறைத்து சேமிப்பதில் கவனம் செலுத்தவும். திருமண வயதில் உள்ளவர்களுக்கு திருமணம் கைகூடும். முதலீடுகளில் அதிக கவனம் தேவை. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வேலை பளு சற்று அதிகரிக்கும். இடமாற்றம் உண்டு. மாணவர்கள் படிப்பில் எதிர்பார்த்த மதிப்பெண்களை பெறுவீர்கள். விவசாயிகள் நல்லவிளைச்சல் உண்டு. ஆரோக்கியம் சீராக இருக்கும். நிதானமாக செயல்படுவது நல்லது

## ரிஷபம்

பொருளாதாரநிலை சிறப்பாக இருக்கும். தொழில் நன்றாக இருக்கும். உத்தியோக உயர்வு ஏற்படும். சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். வெளிநாடு முயற்சிகள் யாவும் வெற்றியை தேடிதரும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மனைவியின் உடல்நலனில் கவனம் தேவை. குடும்ப உறவுகளிடையே கருத்து வேறுபாடுகளை தவிர்ப்பது நல்லது. சொத்து பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வியாபாரத்தில்உள்ளவர்களுக்கு வரவேண்டியபணம் வந்து சேரும். சுறுசுறுப்பாக செயல்படுவது நல்லது. உறவினர்களிடியே கவனமாக பேசவும். வழக்குகளில் வெற்றி உண்டாகும். உயர் அதிகாரிகளின் ஆதரவு இருக்கும். வேலை மாற்றங்கள் உண்டாகும். அலைச்சல்கள் அதிகரிக்கும். விவசாயிகள் விளைநிலங்கள் வாங்கும் யோகம் உண்டு. மாணவர்கள் மன சஞ்சலங்களை தவிர்தால் நல்ல மதிப்பெண் பெறமுடியும். கடன் சுமை அதிகரிக்கும்.

## மிதுனம்

பணம் கொடுக்கல் வாங்கலில் அதிக கவனம் தேவை. ஆரோக்கியதில் அதிககவனம் செலுத்த வேண்டும். கடன் பிரச்சனை களை சமாளிக்கும் அளவுக்கு பணம் கிடைக்கும். யாருக்கும் வாக்குறுதிகள் தர வேண்டாம். கோபத்தை குறைத்துகொள்வது நல்லது. செலவுகள் அதிகமாகும். வேலையில் உள்ள



வர்களுக்கு வேலைபளு அதிகரிக்கும். பண விஷயத்தில் அதிக கவனம் தேவை. நீண்ட நாட்காளாக குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிட்டும். தொழிலில் இருந்த எதிர்புகள் குறையும். இடமாற்றம் ஏற் படும். குடும்பதில். தேவையற்ற குழப்பங்கள் வந்து விலகும். விவசாயிகளுக்கு கடன் பிரச்ச னைகள் ஏற்படும். மாணவர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. வீன் வாக்குவாதத்தை தவிர்த்து கொள்வது நல்லது. வீடு, வாகனம், இடம் வாங்கும் யோகம் உண்டு. தேவையற்ற அலைச்சல்களை தவிர்ப்பது நல்லது.

## கடகம்

குடும்பதில் சுப காரியங்கள் கைகூடும். குடும்பதில் மகிழ்ச்சிகள் நிலவும். தொழிலில் படிபடியான முன்னேற்றம் அடைவீர்கள். கூட்டு தொழிலில் கவனம்தேவை. வெளிநாடு வேலை வாய்புகள் அமையும். வீன் அலைச்சல்களை குறைத்து கொள்வது நல்லது. பூர்வீக சொத்துக் களால் பிரச்சனைகள் உண்டாகும். குடும்ப ஒற்றுமை சிறப்பாக அமையும். ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. உணவு கட்டுபாடு மிகவும் அவசியம். தேவையற்ற செலவுகளை குறைத்து கொள்ளுங்கள். கடன் சுமை குறையும் ஆடை,ஆபரண சேர்க்கை உண் டாகும். பெரிய முதலீடுகளில் கவனம் தேவை. வர வேண்டிய பணம் வந்து சேரும். புதிய முயற்சிகள் வெற்றியைய் தேடி தரும். செல்வாக்கு அதிகரிக்கும். மாணவர்கள் கல்வி யில் அதிக கவனம் செலுத்த வேண்டும். கல்வியில் தேவையற்ற இடையூறுகள் வரலாம். விவசாயிகளுக்கு நல்ல லாபம் உண்டாகும். புதிய நபர்களின் நட்பு மகிழ்ச்சியை தரும். கொடுக்கல் வாங்கலில் அதிக கவனம் தேவை.

## சிம்மம்

ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கௌ ரவம் அதிகரிக்கும். உங்களுடைய முயற்சிகள் அனைத்திலும் வெற்றி பெறுவீர்கள். பொருளா தாரம் சிறப்பாக இருக்கும். வரவேண்டிய பணம் வந்து சேரும். இதுவரை குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிட்டும். ஏதிரிகள் நண்பர்களாக மாறுவார்கள். பொன்,பொருள்,சேர்க்கை உண்டாகும். வம்பு வழக்குகள் முடிவுக்கு வரும். தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும். வெளிநாட்டு தொடர்பு களால் நல்ல ஆதாயம் உண்டாகும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். வேலை தேடுபவர் களுக்கு நல்ல வேலை அமையும். சொத்துக்கள் சேரும். குடும்பதில் மகிழ்ச்சிகள் உண்டாகும். வீடு,வாகனம்,இடம் வாங்கும் யோகம் உண்டு. தொழிலில் இருந்த மறைமுக எதிர்புகள் வில கும். புதிய முயற்சிகள் வெற்றியை தேடி தரும். மாணவர்களுக்கு விளையாட்டில் ஆர்வம் அதி கரிக்கும். படிப்பில் சற்றுபின்தங்கிய நிலை ஏற்படும். விவசாயிகளுக்கு லாபம்எதிர்பார்த்த அளவில் இருக்கும்.

## கன்னி

கணவன் மனைவியிடையே ஒற்றுமை அதி ரிக்கும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மருத்துவசெலவுகள் குறையும். பொருளாதாரம் நன்றாக இருக்கும். குடும்ப உறவுகளால் மகிழ்ச்சிகள் அதிகரிக்கும். சுகமான வாழ்வு கிட்டும். அசையும் ஆசையா சொத்துக்கள் வாங்குவீர்கள். வெளியூர் வேலை வாய்புகளால் ஆதாயம் அதிகரிக்கும். கொடுத்த வாக்குறுதி களை நிறைவேற்றுவீர்கள். பண விஷயங்களில் அதிக கவனம் தேவை. அலைச்சல்கள் குறையும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். பழைய கடன்கள் வசூலாகும். புதிய முயற்சிகளால் அனுகூலம் உண்டாகும். கூட்டு முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். உறவினர்களின் ஆதரவு அதிகரிக்கும். இதுவரை இருந்த காரியதடை விலகும். விவசாயிகளுக்கு விளைச்சல்கள் அதிகரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் நல்ல முன்னேற்றம் உண்டுவிளையாட்டுகளில் ஆர்வம் அதிகரிக்கும். வம்பு வழக்குகள் ஒரு முடிவுக்கு வரும். அரசாங்க ஆதரவு அதி கரிக்கும்.

## துலாம்

ஆண்டின் தொடக்கத்தில் பொருளாதார நெருக்கடிகள் குறையும். குடும்பதில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். உங்களுடையமுயற்சி களில் தடைகள் உண்டாகி வெற்றி பெறுவீர்கள். அலைச்சல்கள் அதிகரிக்கும். கணவன் மனைவியிடையே ஒற்றுமை குறையும். கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கும். பணவரவுகள் சற்று குறைவாகவே இருக்கும்அதிக முதலீடு களை தவிர்க்கவும். பணம் கொடுக்கல் வாங்க லில் கவனம்தேவை. உடல் ஆரோக்கியம் பாதிக்கபடும் ஆரோக்கியதில் அதிக கவனம் தேவை. வீண் வாக்கு வாதங்களை தவிர்க்கவும். யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போடவேண் டாம். தடைபட்ட காரியங்கள் மீண்டும் நடை பெறும். வழக்குகளில் சாதக மான

சூழ்நிலை ஏற்படும். பங்குசந்தைமுதலீடுகளை தவிர்க்கவும். உத்தியோகதால் இடமாற்றம் ஏற்படும். விவசாயிகள் அதிக உழைத்து பாடு படவேண்டிய நிலை உண்டாகும். மாணவர்கள் கடினமாக முயற்சி எடுத்து படிக்க வேண்டும். விளையாட்டுகளில் கவனம் தேவை .

## விருச்சிகம்

வியாபாரத்தில் எதிர் பார்த லாபம் உண்டாகும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். புது புது முயற்சிகளால் ஆதாயம் அதிகமாகும். பொருளாதாரம் எதிர்பார்ததைவிட சிறப்பாக இருக்கும். தேவைகள் அனைத்தும் பூர்த்தி ஆகும். வீடு வாகன சொத்து சேர்க்கை உண் டாகும். கொடுக்கல் வாங்கலில் நல்ல ஆதாயம் உண்டாகும். உத்தியாகதில் இருப்பவர்களுக்கு பணி உயர்வு உண்டாகும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். பேச்சில் நிதானமாக செயல்படவும். தேவையற்ற வாக்குவாதத்தை தவிர்துக்கொள்ளவும். ஆன்மீக பயணங்கள் உண்டாகும். புத்திர பாக்கியம் உண்டாகும். நெருக்கடிகள் அதிகமாக இருந்தாலும் அனைத்தையும் சமாளித்து வெற்றி பெறு வீர்கள். கணவன் மனைவியிடையயே விட்டுக்கொடுத்து போவது நல்லது. பிரிந்து சென்ற உறவுகள் ஒன்று சேறுவார்கள்.பணம் கொடுக்கல்வாங்கல் சிறப்பாகஇருக்கும். யோகமான ஆண்டாக இருக்கும். தொழிலில் நல்ல இரட்டிப்பு லாபம் உண்டாகும்.செல் வாக்கு அதிகரிக்கும். மாணவர்களுக்கு ஆசிரியர் களின் ஆதரவு உண்டாகும் நல்ல மதிப்பெண் பெற்று பெற்றோர்களுக்கு பெருமை சேர்பீர்கள்.

## தனுசு

கடந்த ஆண்டைவிட பொருளாதாரம் சிறப் பாக இருக்கும். இந்த ஆண்டில் திருமணம் கைகூடும். குடும்பதில் ஒற்றுமை நிலவும். குழந்தைகளால் மகிழ்ச்சிகள் பெருகும். நல்ல குடும்ப வாழ்க்கை அமையும். வம்பு வழக்குகள் முடிவுக்கு வரும். வரவேண்டிய பணம் வந்து சேரும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு பணி சுமைகுறையும் சமூதாயதில் உயர்ந்த அந்தஸ்தை பெறுவீர்கள். நீண்ட நாள் பிரச்சனைகள் முடிவுக்கு வந்து மகிழ்ச்சி அதிகரிக்கும். வீண் செலவுகள் உண் டாகும். கவனம் தேவை. முதலீடுகளுக்கு பாதிப்பு ஏற்படாது. குடும்பத்தில் சுப செலவுகள் உண்டாகும். உங்களுடைய தெளிவான சிந்தனையால் லாபங்கள் அதிகரிக்கும்.கூட்டு தொழிலில் இருப்பவர்கள் தனது கூட்டாளி களுடன் சுமூக உறவை கையாண்டு அனு சரித்து நடந்துகொள்ளவும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களை பெறுவீர்கள் நியாபக மறதியை குறைக்க யோகாசனங்களை தினசரி செய்யவும். விவசாயிகள் உழைபிற்கேற்ற பலனை பெறுவீர்கள். ஆடம்பர செலவுகளை குறைத்து கொள்ளவும். பயணங்களில் கவன மாக இருக்கவும் யாருக்கும் வாக்குறுதிகள் தரவேண்டாம்.

## மகரம்

உங்களுடைய முயற்சிகளில் அதிக உழைப் பைபோட்டுவெற்றிபெறுவீர்கள்.ஆரோக்கியதில் அதிக அக்கறை செலுத்தவும். தேவையற்ற பயணங்களை தவிர்த்துகொள்ளவும். மற்ற வர்கள் விஷயங்களில் தலையிட வேண்டாம். பணவரவுகள் சீராக இருக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற அதிக சிரமப்படவேண்டிய நிலை உண்டாகும். புதிய முயற்சிகளில் பல முறை சிந்தித்து செயல்படவும். பிரச்சனைகள் அனைத்தும் படிப்படியாக குறையும். கடன்கள் கட்டுக்குள் இருக்கும். புத்திர பாக்கியம் கிட்டும். தொழிலில் இருந்த மந்தநிலை நீங்கும். உத்தியோக உயர்வு உண்டு. இட மாற்றங்கள் உண்டாகி மகிழ்ச்சியான சூழல் அமையும். கொடுக்கல் வாங்கலில் கவனமாக இருக்கவும். உறவினர்களிடையே அதிக கவனமாக இருக்கவும். அரசாங்க வேலை அமையும். புதிய வீடு வாகனங்கள் வாங்கும் பொது நிதானமாக செயல்படவும். மாணவர்கள் கல்வியில்அதிகஅக்கறை செலுத்த வேண்டும். போட்டிகள் உண்டாகும். செல்வாக்குஉயரும். மனக்குழப்பம் அதிகரிக்கும். நிம்மதி குறையும். உயர் அதிகாரிகளின் ஆதரவு மகிழ்ச்சியை ஏற்படுத்தும். பணிமாற்றம் தொழில் மாற்றம் கட்டாயம் உண்டு. மற்றவர் நலனில் அக்கறை கொள்வதால் பிரச்சனைகளை சந்திபீர்கள்.

## கும்பம்

புதிய தொழில் முயற்சிகளில் சற்றுசிந் தித்து செயல்படவும் கவனம் தேவை.குடும் பத்தில் பிரச்சனைகள் உண்டாகும். திருமண விஷயங்களில் சற்று ஆராய்ந்து முடிவு எடுக் கவும். பொருளாதாரம் தேவைக்கு ஏற்றவாறு இருக்கும். தேவையற்ற பயணங்களை தவிர்க் கவும். பேச்சில் நிதானம் தேவை. தேவையற்ற மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். அசையா சொத்துகள் வாங்குவதில் அதிககவனம்

தேவை. வேலை பளு அதிகரிக்கும் அதனால் மனசோர்வு உண்டாகும். ஆரோக்கியகுறைபாடு கள் அடிக்கடி உண்டாகும் ஆரோக்கியதில் அதிககவனம்தேவை.உணவுகட்டுபாடுதேவை. நெருக்கடிகள் அதிகரிக்கும். உங்க ளுடைய முதலீடுகளில் கவனம் தேவை கூடுமானவரை முதலீடுகளை தவிர்ப்பது நல்லது ஆடம்பர செலவுகளை குறைத்து கொள்வது நல்லது. வியாபாரத்தில் லாபம் சற்று குறைவாகவே இருக்கும். கொடுக்கல் வாங்கலை தவிர்க்கவும். தொழில் போட்டிகள் அதிகரிக்கும். நிலுவையில் இருக்கும் வழக்குகள் இழுபறி நிலை உண்டாகும். மாணவர்கள் கடின முயற்சிகள் மேற்கொண்டால் மட்டுமே நல்ல மதிப் பெண்கள் பெற முடியும். விவசாயிகளுக்கு விளைச்சல் நன்றாக இருக்கும்.

## மீனம்

பொருளாதாரரீதியில் இந்த ஆண்டு சிறப்பாக அமையும் ஆண்டின் தொடக்கத்தில் சுப செலவுகள் உண்டாகும் செலவுகள் அதி கரிக்கும். மருத்துவ செலவுகள் குறையும். தொழிலில் லாபங்கள் அதிகரிக்கும். குழந்தை களால் மகிழ்ச்சிகள் உண்டாகும். கணவன் மணைவி உறவு சிறப்பாக இருக்கும். பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் உண்டாகும். பொன், பொருள், ஆபரண சேர்க்கை உண்டாகும். செய்தொழில் சிறக்கும். கொடுக்கல் வாங் கலில் கவனம் தேவை. பெரிய ஆளவிளான கடன்களை கட்டி முடிப்பீர்கள். பழயபாக்கிகள் வசூலாகும். வெளியூர் வெளிநாடு தொடர்பால் ஆதாயம் உண்டாகும். பெரிய மனிதர்களின் நட்பு மகிழ்ச்சியை தரும். உத்தியோகஸ்தர்களுக்கு சுமூகமான நிலை உண்டாகும் பணி சுமை குறையும். மாணவ மாணவிகள் கல்வியில் நல்ல முன்னேற்றம் பெற்று நல்ல மதிப்பெண்கள் பெறுவீர்கள் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெறுவீர்கள். கடன்கள் குறையும். தொழில்போட்டிகள் விலகும். விவசாயிகளுக்கு விளைச்சல் நன்றாக இருக்கும். வேலை தேடு பவர்களுக்கு நல்ல வேலை அமையும். இது சிறப்பான ஆண்டாக அமையும். சொகுசு வாழ்க்கை அமையும்.

# கொரானா அசுரனை அழிக்கும் வல்லமையுள்ள மும்மூர்த்திகள்

*கொஞ்சம் கருப்பு மிளகு தூள், எலுமிச்சை சாறு, இஞ்சி துண்டு மூன்றையும் தண்ணீரில் கலந்து அந்த தண்ணீரை கொதிக்க வைத்து குடியுங்கள்.

இதுபோல் ஒருநாளைக்கு 2, 3 முறை குடித்து வந்தால் வைரஸ், பேக்டீரியா தொற்றால் நமக்கு எவ்வித பாதிப்பும் வராது. இஞ்சி, கருமிளகு, எலுமிச்சை சாறு மூன்றையும் நீரில் கலந்து அந்த நீரை கொதிக்க வைக்கும் பொழுது விசேஷமான ஒரு கெமிக்கல் ரியாக்ஷன்உருவாகும்.

அந்த புதிய வேதியல் மாற்றம் எத்தகைய மோசமான வைரஸ், பேக்டீரியாவையும் கொன்று விடும். தினம், தினம் தனது மூலக்கூறு வடிவத்தை மாற்றிக் கொள்ளும் கொரோனா எனும் இந்த மாயாவியை எவ்வாறு? அழிப்பது என மருத்துவ உலகம் விழி பிதுங்கி நிற்கிறது.

கொரோனா போன்ற மாயாவி வைரஸ்கள் இனி வருங்காலங்களில் அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது.

ஆன்மிகப் பார்வையில் பார்த்தால் கொரானா கூட ஒருவகையில் அசுரனாகத்தான் என்னத்தோன்றும், அனைத்து மாய அசுரர்களையும் அழிக்கும் மும்மூர்த்திகள் தான் இந்த இஞ்சி, மிளகு, எலுமிச்சை. மேலும் கொரோனா போன்ற வைரஸ்களை அழிப்பதில் கபசுரத்தை காட்டிலும், நிலவேம்பை காட்டிலும் சிறந்தது இந்த இஞ்சி, எலுமிச்சை, கருமிளகு குடிநீர்.



www.aanmeegamalar.com

# மனிதனின் திறமை ஆண்டவனுக்குத் தேவை இல்லை பகதியே ஆண்டவனுக்குத தேவை

மனிதன் எல்லா மிருகங்களையும் வளர்ப்பான். தனது நற்குணத்தை எப்பொழுதுமே வளர்க்கமாட்டான். இதை நல்கவே ஆண்டவன் குணநலன்களோடு காட்சி தருகிறான்.

❖❖❖

அடிப்படையில் இருந்து எதற்கும் சிந்தனை செய்யத் தெரிந்து கொள். உனது புத்தியை நீயே பிடித்துக் கொண்டுவிடலாம்.

❖❖❖

தெய்வத்தைத் தொழுவதற்கு அடிப்படையில் அன்பைப் புரிந்து கொள். உடனேஆண்டவனைப் பார்த்துவிடலாம்.




❖❖❖

நவராத்திரி துர்க்கை நாள். திருந்தாத, திருந்த முடியாத கெட்டுப்போன சமுதாயத்தில் சீர்திருத்தவாதி, பொம்மை போன்று அமர்ந்திருப்பான். அவனே சமுதாய நவராத்திரியில் பெரிய பொம்மை.

❖❖❖

உன்னால் பொம்மை போன்று அமர்ந்திருக்க முடிந்தால் நீயே யோகி. நவராத்திரி கொலு பொம்மைகளெல்லாம் யோகிகளே.

❖❖❖

மனிதனின் புத்தி கெடக்கூடாது. கெட்டால் மனிதன் சக்தியை இழப்பான். இதன்பின் அவனிடத்தில் சக்தி பீடமும் இருக்காது; அமையாது.

❖❖❖

சமைத்த உணவுப் பொருள்களும், விளைந்த, விளைகின்ற உணவு தானியங்களும் சக்தியின் வடிவமான "துர்க்கையே".

❖❖❖

உணவு, உணவு தானியங்களை ஜீரணிக்கக் காத்திருக்கும் மனிதனின் தொப்பையும், மற்ற உயிர்களின் வயிறுமே சக்தி பீடமாகும். இவைகளை அறிந்து துர்க்கையை வழிபடு.

❖❖❖

உலக சக்தியினை இயக்குகின்றவன் ஜாக்கிரதையாய் இருக்கிறான். அவன் கடைபிடிக்கின்ற ஜாக்கிர தைக்கே "உபாசனா மார்க்கம்" என்று பெயர்.

❖❖❖

சக்தி மண்டிக் கிடக்கும் இடங்களை எல்லாம் அறிந்து ஆராய்ச்சி செய்தால், பல இடங்களில் துர்க்கையின் பீடத் தைக் காணலாம். காண்பவனே தேவி உபாசகன். நாட்டிலும் மனிதனிடத்திலும் சோம்பல் இருந்தால், அதுவே வறுமையின் சின்னம். இச்சின்னத்தை ஒழிப்பவன் மனிதனே,

நீராவி என்ஜீன், டீசல் என்ஜீன், மின்சார ரயில் என்று முன்னேறி உள்ளதைப் போல், பக்தியில் பல வகையான பக்திகள் என்றே இல்லை.

❖❖❖

இறைவனை பற்றிக்கொள்ளும் ஒரே முன்னேற்றமே பக்தி.

❖❖❖

சிந்திக்கும் அறிவைச் சிந்திப்பதற்கு மட்டுமே உபயோகப் படுத்து. அதை மற்ற எதற்கும் உபயோகப்படுத்தாதே.

❖❖❖

உணவு தானியம் ஆடு, மாடுகளுக்கல்ல. பிண்ணாக்கு, பருத்திக் கொட்டை நமக்கல்ல என்பதை உணர்ந்துவிடு.

❖❖❖

மனிதனது திறமை மனிதனுக்கே தேவைப்படுகிறது. அதனால் அவன் எவருக்கும் அதை அளிப்பதில்லை.

❖❖❖

தென்னம் பன்னாடையை விலை கொடுத்து வாங்குவோர் இல்லை. அதுபோல் மனிதனின் திறமை ஆண்டவனுக்குத் தேவை இல்லை. உங்களது பக்தியே ஆண்டவனுக்குத் தேவை.

❖❖❖

தேகப்பயிற்சி செய்தால் உடனே உடலில் பொலிவும் பிரகாசமும் தெரியும். சிந்தனை செய்து பார். உலகில் உனது முன்னேற்றம் உடனே தெரியும்.

❖❖❖

போட்டோ எடுத்து அதைத் கழுவினால் உடனே அதில் உன் படம் தெரிவது போல் அறியாமையைக் கழுவினால் அகத்திற்குள் ஆண்டவன் தெரிவான்.

❖❖❖

மணற்கேணிக்கே தூர் வாரும் நிலை வரும். கடலுக்கு தூர் வாருவதே கிடையாது. சிந்திக்கும் நிலையைப் பெற்றுவிட்டால் உன்னிடம் அழுக்கு இருக்கவே முடியாது.

❖❖❖

சிந்தனை என்பது தான் மிகப் பெரிய தீனி. இதைஎவரும் உண்பதில்லை. இதனால் நான் மட்டும் தின்று கொழுக்கிறேன்.

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**நடராஜன்**
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி, தன்ஷிகா
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



**ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்**

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**

# எமபயம் போக்கும்
## பெருங்கரை அட்டாள சொக்கநாதர்

மலை போல வருகின்ற துயரையும்கூட, பனி போல மாயமாய் மறைத்துவிடும் அதிசயத்தை நிகழ்த்தும் திருத்தலமாக திகழ்கிறது, ராமநாதபுர மாவட்டத்தில் உள்ள பெருங்கரை அட்டாள சொக்கநாதர் சன்னதி. இதன் தொன்மைப் பெயர் ராமநாத சமுத்திரம் என்பதாகும். இங்கு சமுத்திரம் எனக் குறிப்பிடப்படுவது. பரந்தளவில் அமைந்துள்ள என்பதை குறிக்கும்.

அதன்படி, கீழ்ப்பெருங்கரை,பெருங்கரை,திருவரங்கி, ராஜாக்கள் பட்டி, பாப்பனேந்தல், பாலவச்சேரிஆகிய ஊர்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறு கிறது. இக்கண்மாயின்கரைபலமைல் சுற்றளவுக்கு நீண்டு பிரமாண்டமாய் அமைந்திருக்கும். ஆகவே, இக்கரையின்பிரமாண்டத்தை எடுத்துச் சொல்லும் விதமாக, காரணப் பெயராக இவ்வூரின் பெயர் 'பெருங்கரை' அழைக்கப்படுகிறது.

இத்தலத்திற்கும் மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்திற்கும் சில ஒற்றுமைகள் உள்ளன. நான்மாடக் கூடலாம் மதுரையில் இறைவன் 64 திருவிஞாயாடல்களை நிகழ்த்தியதாக வரலாறு சொல்கிறது. அத்தகைய லீலைகளில் ஒன்றாக, 47வது நிகழ்வாகச் சொல்லப்படுவது கரிக்குருவிக்கு இறைவன் மந்திர உபதேசம் செய்து அருளிய லீலையாகும். அந்த லீலை நடைபெற்ற தலம்தான் பெருங்கரை அட்டாள சொக்கநாதர் சன்னதியாகும். இந்நிகழ்வு ஆண்டுதோறும் ஆவணி மூலத் திருநாளில் முதல் நாளில் இங்கு நடைபெறுகிறது.



**மதுரையில் வேண்டிக்கொண்ட கருங்குருவிக்கு பெருங்கரையில் காட்சி கொடுத்த சொக்கநாதர்**

### 47வது லீலையின் சாராம்சம்

ஆதிகாலத்தில்,முற்பிறவியில் நிறைந்த அறமும்,சிறிது பாவமும் செய்த ஒரு வன் மறுபிறவியில் கருங்குருவியாக பிறந்தான். அந்த கருங்குருவி பிற பறவைகளினம் பருந்து, வல்லூறு போன்ற பெரிய பறவைகளால் விரட்டப்பட்டு அவதிப்பட்டு வந்தது. பிற பறவைகளு பயந்து பெருங்கரையில் உள்ள அரசமரத்தில் கூடு கட்டி கருங்குருவி மறைந்து வாழ்ந்தது.

அந்த சமயத்தில் பெருங்கரைக்கு வந்த முனிவர் அரசமரம் கீழ் தவம் செய்தபோது மரத்தில் வசித்த கருங்குருவி முனிவரை கண்டு மகிழ்ச்சி அடைந்தது, பிற பறவைகளால் ஏற்படும் இன்னல்கள் பற்றி வருத்தத்துடன் முனிவரிடம் கூறி, தனக்கு மோட்சம் தரும்படி பணிந்து வணங்கியது.

கருங்குருவியின் இன்னல்களை அறிந்த முனிவர், மதுரையில் உள்ள பொற்றாமரை குளத்தில் தினமும் நீராடி ஸ்ரீசோமசுந்தரரை வணங்கி வழிபாடு செய்தால், இம்மை







மறுமை பலன் கிடைக்கும் என்று கூறினார். அப்போதே மதுரையில் உள்ள சிவ பெருமானை மனம் உருகி கருங்குருவி வழிபட்டு தவம் இருந்தது. கருங்குருவியின் தவத்தை பார்த்த சிவன் பெருங்கரையில் உனக்கு மோட்சம் அளிப்பதாக கூறியதாகவும், அங்கு உள்ள அரசமரத்தின் அடியில் கருங்குருவிக்கு மஹா மிருத்யுஞ் சய மந்திரத்தை உபதேசம் செய்து மோட்சமும் கொடுத்து அருளினார்.

அதன்படி கருங் குருவிகளின் வம்சம் தழைத்தோங்கியது. பிற பறவைகளால் ஏற்பட்ட ஆபத்து நீங்கியது என்று கூறப்படுகிறது.

சிவபெருமான் கருங்குருவிக்கு மோட்சம் அளிப்பதுபோல் அதை வா வேலைபாடுகளுடன் கோவில் அமைந்துள்ளதை இப்போதும்காணலாம்.

இந்நிகழ்வின் அடிப்படையில் பிற்காலத்தில் பெருங்கரையில் கோயில் கட்டப்பட்டது. அது மட்டுமன்றி, மதுரை சொக்கநாதரின் ஆலயக் கருவறையும், பெருங்கரை ஆலயக் கருவறையும் ஒரே சாயலில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மதுரை சொக்கநாதப் பெருமான் சன்னதி கி.பி. 12ம் நூற்றாண்டில் கருவறை, அர்த்த மண்டபம்



முதலியவை குலசேகர பாண்டிய மன்னனால் கட்டப்பட்டது. ஆனால், துரதிஷ்டவசமாக அவை நமக்குக் கிட்டவில்லை. இன்றைய நிலையில் காணப்படும் கருவறை, அர்த்த மண்டபம் ஆகியவை நாயக்கர் கால கலைப்பாணியில் அமைந்துள்ளன." ஆனால் கட்டி முடித்தவர் பற்றிய சரியான குறிப்புகள் கிடைக்கவில்லை. பாண்டியர் கால கட்டுமானம் பதினான்காம் நூற்றாண்டில் சேதமாக்கப்பட்டது.

கருவறையின் நான்கு புறமும்பக்கத்திற்கு இரண்டு என எட்டு யானைகள் இவ்விமானத் தைத் தாங்குவதாகவும். இது இந்திரனால் தேவலோகத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட தாகவும் திருவிளையாடல் புராணம் குறிப்பிடுகிறது. அச்சு அசலாக இதே அமைப்பில்தான் பெருகரை அட்டாள சொக்கநாதர் சுவாமி சுருவறையும் அமைந்துள்ளது. திசைக்கு ஒன்றாக மொத்தம் எட்டு யானைகள் இக்சுருவறையைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ளன.

தைப்பொங்கல் திருநாளன்று மதுரையில் கல்யானைக்கு கரும்பு கொடுத்து பூஜை நடத்துவது போல், பெருங்கரை கோவிலில் வடபுறமாக உள்ள கல்யானைக்கு கரும்பு கொடுத்து விழா நடத்தப்படுகிறது. கோயில் கருவறை ருத்ர ரூபமாக, சுயம்பு மூர்த்தியாக, அஷ்ட கஜங்களுடன் அஷ்ட கோண பீடத்தில் அமைந்துள்ளது. எனவே, இத்தலத்தில் வழிபடு வோருக்கு எமபயம் நீங்கி ஆயுள் அதிகரிக்கும் என்பது ஐதிகமாக நிலவுகிறது.

மேலும் மதுரைக்கு இணையாக ஜுரஹர தேவ ரும், ஜுரஹர லிங்கமும் இணைந்துள்ள சன்னதி இங்கு மேற்குச் சுற்றில் அமைந்துள்ளது. இந்த சுவாமிக்கு பாலாபிஷேகம் செய்து தயிர் சாதம் நிவேதனம் அளித்தால் நம்மை வருத்தி நிற்கும் பிணிகள் யாவும் விலகி, பூரண நலம் கிட்டும் என்பது அனுபவபூர்வமாக பலர் உணர்ந்த உண் மையாகும்!

ஊரின் ஈசான்ய மூலையில், கிழக்குப் பார்த்த வண்ணம் கோயில் அமைந்துள்ளது. ஆனாலும், கோயிலின் வடக்கு கிழக்குப் பக்கங் களில் கண்மாய்க் கரை நெடிதாக உயர்ந்து காணப் படுகிறது. எனவே, பக்தர்கள் எல்லோரும் தெற்குப் பார்த்த வாசலையே பிரதானமாகப் பயன் படுத்துகின்றனர். கோவிலின் நான்கு புறமும் உயர்ந்த திருமதில் அமைந்துள்ளது. கிழக்கு. தெற்கு ஆகிய இருவாசல்களிலும் சாலக்கோபுர அமைப்பு காணப்படுகிறது.

தெற்கு வாசலின் முன்புறம் கி.பி. 13ம் நூற்றாண்டை சேர்ந்த திரிசூலக் கல் ஒன்று நடப்பட்டுள்ளது. பிரதான வாசல் தாண்டியதும், விரிந்து பரந்த பிராகாரம் காணப்படுகிறது. சுவாமி சன்னதிக்கு தென்புறம் அம்பாள் அங்கயற்கண்ணி சன்னதி உள்ளது. சுவாமி, அம்பாள் ஆகிய இரு சன்னதிகளுக்கும் கிழக்கே தனித்தனி வாசல்கள் உள்ளன. சுவாமி சன்னதி எதிரே பலிபீடம். நந்திதேவர் திருமேனி உள்ளன. மேற்குச் ற்றில் கன்னிமூலை கணபதி உள்ளார்.

மூலவர் விமானம் வேசர வடிவில் அமைந்துள்ளது. தேவகோட்டத்தில்







தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், துர்க்கை சன்னதிகள் உள்ளன. அம்பாள் சன்னதியும் கருவறை, அர்த்த மண்டபம் ஆகியவை கற்றளியாகவும், மகாமண்டபம் சுதைக் கட்டுமானமாகவும் அமைந் துள்ளது.

அர்த்த மண்டப வாசலில் விநாயகர், சுப்பிரமணியர் திருமேனிகள் உள்ளன. கருவறை மூலவராக லிங்கத் திருமேனியராக அட்டாள சொக்கநாதர் எழுந்தருளியுள்ளார். உடல்நல குறைபாடு, சொத்து பிரச்னை போன்றவற்றால் வாழ்வில் கஷ்டங்களை அனுபவித்து வருபவர்கள். இவரை வழிபட்டு இன்னல்கள் நீங்கி இன்பமான வாழ்வு பெறுகிறார்கள்.

ஜரஹர தேவர், ஐயப்பன், மகாவிஷ்ணு, பாலமுருகன் ஆகிய பரிவார தேவதை சன்னதிகளும், வடக்குச் சுற்றில் சண்டிகேசுவரர் சன்னதியும், கிழக்குச் சுற்றில் பாண்டியன் கிணறு, கால பைரவர், நவ கிரகம், சனீஸ்வரர், ஆஞ்சநேயர் சன்னதிகளும் உள்ளன.



அழகுராஜா

சிவ ஆகம விதிப்படி. நாளும் இரண்டு கால பூஜை நடத்தப் பட்டு வருகிறது. மாதந்தோறும் இரண்டாம் ஞாயிறு அன்று திருவாசக முற்றோதல் வழிபாடு நடத்தப்பட்டு வருகிறது. பிரதோஷம், தேய்பிறை அஷ்டமி ஆகியவை சிறப்பாக நடைபெறுகிறது. தலவிருட்சமாக சரக் கொன்றை செழித்து வளர்ந்து நிற்கிறது.

ஐப்பசி அன்னாபி ஷேகம், கார்த்திகை தீபம், மார்கழி திருப்பள்ளியெழுச்சி, தைப் பொங்கல், 'மகாசிவராத்திரி, பங்குனி உத்திரம் விழாக்கள் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

அங்கயற்கண்ணி அம்பிகைக்குபௌர்ணமி. அமாவாசை நாட்களில் சிறப்பு அபிஷேக, அலங்கார, ஆராதனைநடைபெறுகிறது.

இத்தலத்து ஈசன் எமபயம் போக்குபவர் என்பதால், மதுரை ராமேசுவரம் சாலையில் செல்லும் சுற்றுலா பயணிகள் பக்தர்கள் தங்களது வாகனங்களை நிறுத்தி வழி பட்டு செல்கின்றனர்.

– முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா செல்: 9994162192



www.aanmeegamalar.com





# புண்ணியத்தை பெருக்கும் அட்சயதிருதியை

ஒவ்வொரு வருடத்திலும் ஒருசில நாட்கள் மிகவும் புண்ணிய, புனித நாளாக விளங்கு கிறது, அந்தவகையில் அட்சய திருதியை என்பது, மிகச்சிறந்த சிறப்புகள் கொண்ட தினமாக விளங்குகிறது.

சோதிடத்தின் படி ஒவ்வொரு வருடத்திலும் மூன்றரை பௌர்ணமி நாட்கள் (திதிகள்) மிக மங்களகரமானவையாகக் கருதப்படுகின்றன. இவை மூன்றரை திதிகள் என்றும் அழைக்கப் படுகின்றன. அவை:

சித்திரை மாத வளர்பிறையின் முதல் திதி "புது வருட துவக்கமாகவும்'',

ஆவணி மாதத்தின் வளர்பிறையின் பத்தாம் திதி "விஜய தசமியாகவும்'',

வைகாசி மாதத்தின் வளர்பிறையின் மூன் றாம் திதி "அட்சய திருதியையாகவும்''

கார்த்திகை மாதத்தின் வளர்பிறையின்முதல் திதி அரை திதியாகக் கணக்கில் கொண்டு "மூன்றரை 3½ முகூர்த்தங்கள்" என்றுஅழைக் கப்படுகின்றன.

முதல் மூன்று திதிகள் முழுமையான திதிகளாகவும் கடைசி திதி அரை திதியாக வும் கணக்கிடப் படுகின்றன. இவை மொத் தம் சேர்ந்து மூன்றரை முகூர்த்தத்தை வழங்கு கின்றன. சோதிட சாத்திரத்தின்படி இந்நாளில் சூரியனும் சந்திரனும் சம அளவு உயரொளியுடன் விளங்கும் என நம்பப் படுகிறது.

அட்சய திருதியை நவன்ன பர்வம் எனவும் அழைக்கப்படுகிறது.

மேற்கண்ட மூன்றரை நாட்களில், இறை பாராயணம், தவம், கொடைகள், சடங்கு ரீதியான முழுக்கு, தியாகங்கள், வேள்வி செய்தல் ஆகியன செய்தால் பல்வேறு நன்மைகள் ஏற்படும்.

இந்த தினத்தில் மறுமைக்கு (மனித வாழ்க்கை முடிவுக்கு பின்) வேண்டிய செயல்களை செய்தால் இரட்டிப்பு பலன் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் ஒருசில காரண காரியங்களால் இம்மைக்கு (தற்போதைய வாழ்க்கைக்கு) வேண்டியவற்றை செய்தாலும் இரட்டிப்பு பலன் கிடைக்கும் என்று திரித்து கூறப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. மொத்தத்தில் இது ஆன்மீக நடவடிக்கைகளுக்கே உகந்ததேயன்றி, உலகாதாயச் செயல்களுக்கு உகந்த நாள் அல்ல என்று கருதப்படுகிறது.

இருப்பினும், இந்த திதியில் உலகாதாய நடவடிக்கைகள் தொடங்குவதும் கூட சிறப்பே. ஆனால் இந்து மதத்தின் நல்ல நேரம் பார்க்கும் சோதிட சாத்திரத்தின் நேரத்துடன் பொருந்தியுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் கோள்களின் நகர்வும் அது போன்ற அம்சங்களும் செயலைச் செய்பவருக்கு சாதகமாக இருப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இதுபோன்ற நல்ல நாட்களை பின்பற்று பவர்கள் இந்தத் திதியை குருட்டுத்தனமாக அனைத்து விதமான வாழ்வுசெயற்பாடு களைத் துவக்கவும் நடத்தவும் பயன்படுத்தக் கூடாது.

இந்த நாட்களில்செய்யப்படும் செயல்களுக்கு இரட்டிப்பு பலன் கிடைக்கும் என்ற காரணத்தினால், முடியாத செயலை கஷ்டப்பட்டு செய்து பலனை எதிர்பார்த்து காத்திருக்கக் கூடாது.

ஆக மொத்தத்தில் இந்த அட்சய திருதியை என்பது ஒருசிறப்பு வாய்ந்த நாள் இந்த நாளில் பொன் நகைகள் வாங்கினால் சுபிட்சம் பெருகும் என்று இந்து தர்ம சாஸ்திரம் எதுவும் கூறவில்லை,



கீதா–ராஜன்

தற்போது சில வருடங்களாக அட்சயதிருதியை நாள் அன்று நகை கடையில் வரிசையில் நின்று நகை வாங் குவது என்பது சொல்லப்படாத, எழுதப்படாத மரபாக மாறிவருகிறது. இவை அனைத்தும் தங்க நகை வியாபாரிகள், ஊடகங்களின் உதவியுடன் நடைமுறைக்கு கொண்டு வந்தவையே. வீட்டில் உள்ள பழைய நகையை சுத்தம் செய்து லட்சுமி, குபேரர் முன்பு வைத்து பூஜை செய்தாலே இந்நாள் விஷேஷமானதாக இருக்கும், அன்றைய தினம் கனகதாரா ஸ்தோத்திரத்தை லட்சுமி தேவியின் முன்பு பாராயணம் செய்தால் சகல ஐஸ்வர்யம் குடும்பத்திற்கு கிடைக்கும்.

மேலும் செவிவழிச் செய்தியாக, இந்த நாளில் வீட்டிலுள்ள பல்லிகள் யார் கண்ணிலும் தென்படாமல் மறைந்து விட வேண்டும் என்று வாஸ்து பகவான் கட்டளையிட்ட நாளாகவும் கூறுவார்கள்..

## இந்த சிறப்பு தினத்தில் நடைபெற்ற விஷேஷங்கள்

இந்து இதிகாசப்படி, அட்சஷய திருதியை நாளன்றே வேதவியாசர் மகாபாரத இதிகா சத்தை விநாயகரிடம் எழுதச் சொல்லி கட்டளையிட்டார்.

திருமாலின் அவதாரமான பரசுராமரின் பிறந்த நாளாகவும் கடைபிடிக்கப்படுகிறது.இன்றும் கோவாவும் கொங்கண் பகுதியும் பரசுராம சேத்திரங்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன.

வைசாக மாதத்தின் வளர்பிறையின் மூன் றாம் நாளான அட்சய திருதியை வருடத்தின் மிகப் புனிதமான நாட்களில் ஒன்றாகக் கருதப் படுகின்றது.

பொதுவாக இந்த நாளில் திருமாலை நெல் அரிசியுடன் வணங்கியும் உண்ணா நோன் பிருந்தும் வழிபடுவர். இந்நாளில் கங்கை நதி யில் நீராடுவது மிக மங்களகரமானது எனக் கருதப்படுகிறது.

காசியில் அன்னபூரணித் தாயாரிடமிருந்து, சிவபெருமான் தமது பிட்சைப் பாத்திரம் நிரம்பும் அளவு உணவைப் பெற்ற தும் அட்சய திருதியை அன்றுதான்.

பாஞ்சாலியின் மானம் காக்க, கண்ணன் ‘அட்சய’ என்று கூறி பாஞ்சாலியின் ஆடை யை வளரச் செய்ததும் அட்சய திருதியை நாளன்றுதான்.

வேதத்தில் அட்சய திருதியை நாளில் அறிவு பெறுதல் அல் லது கொடையளித்தல் நல்ல பலனளிக்கும் எனக் கூறுகின்றன. இது புதிய வணிகத்தினையோ அல்லது முயற்சியையோ துவங்க வெகு நன்னாளாகக் கருதப் படுகிறது. பலர் இந்த நாளில் தங்கம் அல்லது சொத்து வாங்குகின்றனர்.

மக்கள் இந்த நாளில் உண்ணாநோன்பும் பூசைகளும் கடைபிடிக் கின்றனர். விசிறி, அரிசி, உப்பு, நெய். சருக்கரை, காய்கறிகள், புளி, பழம், துணிகள் ஆகியவற்றை கொடை யாக அளிக்கின்றனர். இந்த நாளில் திருமாலை வணங்குகின்றனர். தீப வழிபாடு செய்யும் போது சிலையின் மீது அல்லது அருகில் துளசி தீர்த்தம் தெளிக் கப்படுகின்றது.

வங்காளத்தில், அட்சய திருதியைநாளில், “அல்கதா” எனும் விழா கொண்டாடப்படுகிறது. அது விநாயகர் மற்றும் லட்சுமியை வணங்கி புதிய வணிகக் கணக்குப் புத்தகத்தை எழுதத் தொடங்கும் நாளாகும். வங்காளிகள் இந்த நாளில் பல சமயச் சடங்குகளையும் செய்கின்றனர். அட்சய திருதியை திருமணங் களுக்கு ஏற்ற காலமாகவும் கருதப்படுவதால் அந் நாளில் பெரும் எண்ணிகையிலான திருமணங்களும் நடத்தப்படு கின்றன.

செல்வத்திற்கு அதிபதியான குபேரரே செல்வமிக்க கடவுள் என நம்பப்படுகிறார். இந்த நாளில் குபேரர் கூட விஷ்ணுவின் மனைவியும் செல்வத்திற்கான தெய்வமான லட்சுமியை வணங்கு வார் என லட்சுமி தந்தரம் எனும் நூல் கூறுகிறது. இந்த நாளில், குபேர லட்சுமி பூசை நடத்தப் படுகிறது. அதில் லட்சுமி உருவப்படத்துடன் குபேரரின் அடையாளமான சுதர் சன குபேர எந்திரமும் ஒன்றாக வைக்கப்பட்டு வணங்கப் படுகிறது.

– கீதாராஜன்:
செல்: 9444229203



# அம்மனே விரும்பி அமர்ந்த தலம்

சக்தி தலங்களில் மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி அம்மன் தலம் மிக முக்கியமானது.

மேல்மலையனூரில் மட்டுமல்ல பல இடங்களிலும் அங்காள பரமேஸ்வரிக்கு ஆலயங்கள் உண்டு ஆனால் சில இடங்களில் அவளேசென்று விரும்பி இருந்து அருள்பாலிக்கும் ஆலயங்கள் உள்ளது.

அப்படி ஒரு ஆலயத்தை பற்றி தான் இப்போது பார்ப்போம்.

இவ்வுலகில் சக்தியின் வேலைகளுக்கு அளவேது அவள் என்ன நினைக்கிறாளோ இதுதான் இப்பூவுலகில் நடக்கும்.

வள்ளாள மகாராஜனின் கொடுமைகளைத் தாங்க முடியாத மக்கள் அம்பாளிடம் முறையிட்டனர். ஆங்காளியாக உருவெடுத்தஅம்மன் வள்ளாள மகாராஜனையும், அவன் பட்டணத்தையும் சூரையாடி அழித்தாள். அவளது ஆங்காரம் குறையாததை கண்டு அனைவரும் செய்வதறியாமல் தவித்தனர்.

இவற்றையெல்லாம் கண்ட அவளின்பரிவாரங்களின் தலைவரான பாவாடைரயர் மனதில் தில்லைவனம் அழைத்துச் சென்றால் ஆங்காளியின் சினம் தணியும் என்பதை உணர்ந்தார்.

பின்னர் ஆங்காரமாக இருக்கும் அவளை அழைத்து வர அவள் மனம் ஈர்க்கும் பம்பை ஒளியையும் சிலம்பொலியும் இசைக்கச் செய்து தில்லைவனம் நோக்கி அழைத்து வந்தனர்.

தில்லை வனத்தில் உள்ள ஒரு ஆற்றங்கரை வழியாக வரும் பொழுது புங்கைமரங்கள் நிறைந்த இந்தப் பகுதியில் விழி மலர்ந்து அமர்ந்தாள். அப்போதுதான் அவளின் கையில் இருந்த பிரம்ம கபாலமும் அவளின் கால் திருவடிக்கு வந்தடைந்தது. அவளது சினம் தணிந்த அதோடு மட்டுமல்லாமல் அவளின் மனதிலும் ஒரு ஆனந்த பரவசம் அடையப் பெற்றாள்.

அழகான நீரோடை அற்புதமான தில்லைவனம் பராசக்தியின் மனதைக் கவர்ந்துவிட்டது தன்னுடன் வந்த பெரியாண்டவர், பாவாடைராயன் மற்றும் துவார சக்திகளிடம் நான் இங்கு அமர்ந்து மனம் அமைதி பெற அம்பலத்தில் இருக்கும் அம்பனை நோக்கி தவம் செய்யப் போகிறேன் நீங்கள் என்னோடு இருந்தாலும் சரி சென்று விட்டாலும் சரி என்று கூற.

நாங்கள் உங்களை விட்டு எங்கே செல்லப் போகிறோம் நாங்களும் உங்களுடனேயே இருக்கிறோம் என்று கூறி அமர்ந்துவிட இரவுப் பொழுது முடிந்ததும் பகல் சூரியன் உதிக்க தொடங்கியது தில்லை வனத்தில் மக்கள் நடமாட்டம் தொடங்கியது அப்போது ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து ஒளி வர சிலர் அந்த இடத்தை நோக்கி சென்றனர்.

அங்கு சென்று பார்த்த போது தான் தெரிகிறது ஒரு அற்புதமான அங்காளம்மனின் திருவுருவச்சிலை இருக்க இதை ஊர் மக்களிடம்





தெரிவித்தனர் ஆற்றங்கரையோரம் இருக்கிறதே இதை நாம் ஊருக்குள் எடுத்துச் செல்லலாம் என்று முயற்சி செய்தபோது. அம்மனின் அருள் வந்த ஒரு பக்தர் நானே விரும்பி அமர்ந்த இடம் இது நான் இங்கேயே இருக்கிறேன் எனக்கு இங்கேயே வழிபாடு செய்யுங்கள் என்று அருள்வாக்கு கூற.

உடனே பக்தர்கள் மெய்சிலிர்த்துப் போனார் கள் தாயே பராசக்தி உன் விருப்பம் நீ எங்கே விருப்பப்பட்டு அமர்ந்தாயோ அதே இடத்தில் வைத்து உன்னை நாங்கள் வழிபாடு செய்கிறோம் நீ எங்கள் ஊருக்கு வந்ததும் பெரும் பாக்கியம் என்று மனமுருக வேண்டினார். அதே போல் ஒரு சின்ன கொட்டகையில் அம்மனை வைத்து வழிபாடும் செய்தனர்.

காலங்கள் உருண்டோடின சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் கருங்கல்லால் ஆன ஆல யம் அமைக்கப்பட்டது. அதன் பின்னர் அது நூதன ஆலயமாக மாற்றப்பட்டு பிரம்மாண்ட ஆலயமாக தற்போது காட்சியளிக்கிறது. முதன்முதலில் ஆற்றங்கரையில் கிடைத்த அங்கா ளம்மன் சிலையை ஆதி அங்காளம்மன் என்று திருநாமத்தைச் சூட்டி இவ்வாலயத்தில் இன்னும் வைத்து வழிபாடு நடத்தி வருகிறார்கள்.

இந்த ஆலயத்தின் அமைப்பு பற்றி பார்ப்போம்.கோவிலின் முகப்பில் அங்காளம்மன் சிம்ம வாகனத்தில் பூதகணங்களோடு காட்சி தருகிறார்.

முன் மண்டபத்தில் திரிசூலம் பலிபீடம் நந்தி அழகுற அமைந்துள்ளது மகாமண்டபம் முன்புறம் இருபுறமும் அங்காளம்மனின் வெவ்வேறு அலங்காரத்தில் இரண்டு பிரம்மாண்டமான சுதை சிற்பங்கள் காட்சி தருகின்றனர் மேலேயும் சிம்ம வாகனத்தில் அங்காளம்மன் கட்சி தருகிறார் அவைகளை வணங்கிவிட்டு உள்ளே சென்றால்.

விநாயகர், முருகன், ஆதிஅங்காளம்மன், வீரபத்திரர், சம்பந்தர், சன்னதிகளும் உள்ளது.

அர்த்த மண்டபத்தின் மேலே கஜலட்சுமி



இருபுறமும் துவார சக்திகள் உள்ளே உற்சவர்கள் சிலை வைக்கப்பட்டுள்ளது.

கருவறையில் கிழக்கு நோக்கி நான்கு திருக் கரங்களோடு சதுர பீடத்தில் அமர்ந்த கோலத்தில் அற்புதமாய் காட்சி தருகிறாள் அங்காளம்மன் அம்மன் அமர்ந்திருக்கும் பீடத்தில் சிவன் விஷ்ணு பிரம்மா மூவரும் அருள்பாலிக்கிறார்கள். கருவறையின் மேலே தெய்வங்களில் சுதைச் சிற்பங்கள் நிறைந்த அழகான கோபுரம் மூன்று கலசங்களோடு அற்புதமாய் காட்சி தருகின்றது.

பிரகாரத்தில் சரக்கொன்றை மரத்தடியில் வீரனார் தனிசன்னதியிலும் புங்கைமரத்தடியில் பெரியாண்டவர் தனிசன்னதியிலும், மற்றும் பாவாடைரயன் பேச்சியம்மன் இருவரும்ஒரே தனி சன்னதியிலும் அற்புதமாய் காட்சியளிக்கின்றனர். மாசி மாதம் ஐந்து நாள் உற்சவம்இக்கோவிலில் வெகு விமர்சையாக கொண்டாடப்படுகிறது. முதல்நாள் உற்சவமாக சீர்வரிசை கொண்டுவந்து லட்சார்ச்சனையோடு உற்சவம் தொடங்கு கிறது. மகாசிவராத்திரியன்று சிறப்பு அபிஷேகங்கள் செய்யப்பட்டு வாசனை மலர் களால் அலங்கரிக் கப்பட்டு அம்பாள் அழகுற காட்சி தருவாள்.

மறுநாள் அமாவாசை அன்று மயான கொள் ளை வைபவம் நடைபெறும். ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டு குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் இங்கு வழங்கப்படும் சிறப்பு பிரசாதத்தை தம்பதியினர் இருவரும் கோவிலில் அமர்ந்து சாப்பிட வேண்டும். பின்னர் அம்பாளிடம் சென்று தங்களுக்கு குழந்தை வரம் வேண்டி பிரார்த்தனை செய்தால் அடுத்த ஆண்டு மாசி மதத்திற்குள் குழந்தை பாக்கியத்தை தருகிறாள் இந்த மகேஸ்வரி என்று பலனடைந்த பக்தர்கள் மெய்சிலிர்க்க கூறுகின்றனர். குழந்தைப் பேறுக் கான பிரார்த்தனை ஆண்டுக்கு ஒருமுறை மட் டுமே இவ்வாலயத்தில் செய்யப்படுகிறது என்பது சிறப்பம்சமாகும்.

ஏனோ தெரியவில்லை இன்னும் திருமணம் தள்ளிப் போகிறது தடைபடுகிறதே என்று வருத் தப்படுபவரா நீங்கள்? கவலையை விடுங்கள்.

மாதம்தோறும் அமாவாசை அன்று இவ்வால யத்தில் அருள் பாலிக்கும் அங்காளம்மன் மற்றும் பெரியாண்டவருக்கு சம்மங்கி பூக்களால் ஆன மாலை அணிவித்து பிரார்த்தனை செய்தால் மிக விரைவாக திருமணம் கைகூடுவதாக இங்கு வரும் பக்தர்கள் கூறுகிறார்கள்.

பிரார்த்தனை செய்து பிரார்த்தனைநிறைவேற திருமணம் செய்துகொண்ட தம்பதியினர் இவ் வாலயத்திற்கு தம்பதிகளாய் வந்து அம்பாளுக்கு மனம் குளிர வாசனை திரவியங்களால் அபி ஷேகம் செய்தும். பொன் பொட்டு கட்டி விட்டு செல்கிறார்கள்.

வீடு கட்டுவது என்பது சாதாரண விஷயமா அப்பப்பா எவ்வளவு துயரங்களை நாம் சந்திக்க வேண்டியதிருக்கும் ஆனால் பணம் இருக்கலாம் ஆனால் வீடு கட்டும் வேலை ஏதோ தடைபட்டுக் கொண்டே இருக்கும் என்று எவ்வளவோ பேர் சொல்லி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம் இறை யருள் இருந்தால் மட்டுமே இவைகள் அனைத்தும் சாத்தியம்.

ஆமாம் சிலருக்கு வாஸ்து தோஷம் சில ருக்கு வீடு கட்ட தடை என ஜாதகத்தில் பல்வேறு கோளாறுகள் இருக்கும் இதனால் வீடு கட்டுவதில் மிகப்பெரிய தடைகள் இருக்கும். எப்பேர்ப்பட்ட தடைகளாக இருந்தாலும் சரி வீடு கட்டும் முன் பூமி பூஜை செய்ய ஒரு மஞ்சள்பூசிய



செங்கல் வைத்து இந்த அம்மனிடம் வழிபாடு செய்து அம்மனின் அபிஷேக தீர்த்தத்தை பெற்றுச் சென்று.

பூமிபூஜையின்போது முதல் கல்லாக பூஜிக்கப்பட்ட அந்தக் கல்லை பூமியில் வைத்து அபிஷேக தீர்த்தத்தை அதன் மீது ஊற்ற வேண்டும் பிறகு பராசக்தியை மனதில் நினைத்துக் கொண்டு பிரார்த்தனை செய்த பிறகு வீடு கட்டும் பணியை தொடங்கினாள் தங்குதடையின்றி வேலைகள் முடிந்து நீங்களும் புது வீட்டு குடிபுகுந்து குதூகலமாக வாழ ஆரம்பிப்பீர்கள். இவைகள் எல்லாமே இந்த அம்பாளின் அருளால் கிடைத்துள்ளதாக பலன் அடைந்த பல பக்தர்கள் இங்கு கூறுவதை பார்க்கலாம்.

புதிய வாகனம் வாங்குவோர் அனைவருமே இக்கோவிலுக்கு வந்து அம்மன் சன்னதி முன் நிறுத்தி எலுமிச்சம்பழம் மாலை அணிவித்து புது வாகனத்திற்கு பூ வைத்து எலுமிச்சம்பழம் வைத்து பூஜை செய்து சாவியை அம்பாள் மடியில் வைத்து பூஜிக்கப்பட்ட பிறகே வாகனத்தை எடுத்துச் செல்கின்றனர். இப்படி செய்வதால் வாகனத்தால் எங்களுக்கு எந்த விதமான விபத்துக்களும் ஏற்படுவதில்லை எங்களை கண் இமைபோல் காப்பாற்றுவால் பராசக்தி என்று கூறுகிறார்கள்.

படித்து முடித்து விட்டோம் நான் படித்த படிப்புக்கு வேலை கிடைக்கவில்லை என்ற மன வருத்தத்தில் இருப்பவர்கள் தங்கள் கல்விச் சான்றிதழை அம்மனின் மடியில் வைத்து பூஜித்து வழிபாடு செய்தால்.என் தகுதிக்கு ஏற்ற வேலை நிச்சயம் கிடைக்கிறது அப்படி கிடைத்தவர்கள் பிரார்த்தனையாக தாங்கள் வாங்கும் முதல் சம்பளத்தை அம்மனின் மடியில் வைத்து பூஜித்து விட்டு பிறகு தான் வீட்டுக்கு எடுத்துச் செல்கின்றனர்.

நாம் சொல்லடி இலிருந்துகூட தப்பி விடலாம்,ஆனால் கண் திருஷ்டியிலிருந்து தப்பவேமுடியாது. ஒரு மனிதனின் வாழ்க்கையை கண் திஷ்டி புரட்டிப் போட்டுவிடும். ஆனால் எந்த விதமான கண் திருஷ்டியாக இருந்தாலும் சரி இவ்வாலயத்திற்கு வந்து கண்திருஷ்டி நீங்க அத்தனை செய்தபின் அம்பாளின் திருப்பாதத்தின் கீழே இருக்கும் திருநீரு நிரப்பிய பிரம்ம கபாலம் அதை நம் சிரசில் மூன்று முறை வைத்து எடுத்து பின்னர் அதில் இருக்கும் திருநீரை நமக்குத் தருவார்கள் அதை நாம் நெற்றியில் இட்டுக் கொண்டு சிறிதும் அடித்து வீட்டின் பூஜை அறையில் வைத்து விட வேண்டும் அப்படி வைத்தால் நமக்கு ஏற்பட்டுள்ள கண் திருஷ்டி நீங்கி விடும்.பூஜிக்கப்பட்ட அந்த விபூதி வீட்டில் இருக்கும் வரை எந்த கண் திருஷ்டியும் நம் வீட்டை அண்டாது என்று நம்புகின்றனர்.



பொ.பாலாஜிகணேஷ்

இவ்வாலயத்தை பொருத்தவரை சர்வ பிரார்த்தனை தலம் என்று கூட கூறலாம் எல்லா வற்றிற்கும் இந்த தீர்வு கிடைக்கும் அம்பாளின் அருளால் எல்லாமும் நமக்கு கிடைக்கும் அப்படிப்பட்ட அம்மனை தரிசிக்க ஒருமுறை சிதம்பரத்திற்கு வாருங்கள்.

**கோவில் இருப்பிடம்:**

சிதம்பரத்தில் அங்காளம்மன் கோவில்தெருவில் ஆலயம் உள்ளது. கடலூர் மார்க்கமாக வந்தால் கஞ்சித் தொட்டிபேருந்து நிறுத்தத்தில் இறங்கி யும், மயிலாடுதுறை மார்க்கத்தில் இருந்து வந்தால் தெற்கு வீதி பேருந்து நிறுத்தத்தில் இறங்கி ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இவ் ஆலயத்தை அடையலாம்.

**கோவில் திறந்திருக்கும் நேரம்**

காலை 6 மணி முதல் 12 மணி வரை மாலை 5 மணி முதல் 8 மணி வரை.

– பொ.பாலாஜிகணேஷ்
சிதம்பரம், செல்:9842550844




# ஸ்ரீ ராமநவமி

சித்திரை மாத சுக்லபக்ஷ நவமியை 'ஸ்ரீராம நவமி' எனக் கூறுவர். ஸ்ரீராமனின் பிறப்பு அன்று நடந்ததால் ஸ்ரீராமநவமி கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் புனர்பூச நக்ஷத்திரத்தில், நண்பகலில் கடக லக்னத்தில் சூரியன் உட்பட ஐந்து கிரஹங்கள் உள்ளன, அத்தகைய சுபதினத்தில் அயோத்தியில் பிரபு ஸ்ரீராமனின் பிறப்பு நடந்தது. பல ராமர் கோவில்களில் சித்திரை மாத சுக்லபக்ஷ பிரதமை முதல் ஒன்பது நாட்களுக்கு உற்சவங்கள் கொண்டாடப்படுகின்றன. இராமா யண பாராயணம், கதைகீர்த்தனங்கள் மற்றும் ஸ்ரீராம விக்ரஹத்தின் பல்வேறு அலங்காரங்கள் ஆகியன செய்யப்பட்டு இந்த உற்சவம் கொண் டாடப்படுகின்றது. நவமி அன்று மதியம் ஸ்ரீராமனின் பிறப்பு பற்றிய கீர்த்தனங்கள் பாடப்படுகின்றன.

மதிய வேளையில் ஒரு தேங்காய்க்கு சிறு குழந்தையின் தொப்பி அணிவித்து தொட்டிலில் வைத்து தொட்டிலை ஆட்டுகின்றனர். பக்தர்கள் அதன் மீது குலால் மற்றும் மலர்களை தூவுகின்றனர். இன்றைய தினம் ஸ்ரீராம விரதமும் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த விரதத்தைக் கடைபிடிப்பதால் எல்லா விரதங்களின் பலன்களும் கிடைக்கின்றன மற்றும் எல்லா பாவங்களும் தொலைந்து இறுதியில் உத்தம லோகங்களும் கிடைக்கின்றன.

தெய்வங்களின் மற்றும் அவதாரங்களின் ஜன்மதிதி அன்று அவர்களின் தத்துவம் பூமி யில் அதிகபட்ச அளவு செயல்பாட்டில் உள்ளது. ஸ்ரீராமநவமி அன்று ராமதத்துவம் ஏனைய தினங்களைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு செயல் பாட்டில் உள்ளது. இதன் பயனைப் பெறுவதற்கு ராமநவமி அன்று 'ஸ்ரீராம ஜய ராம ஜய ஜய ராம' என்ற நாமஜபத்தை அதிகபட்ச அளவு செய்ய வேண்டும்.

### பிரபு ஸ்ரீராமனின் நாமஜபமான 'ஸ்ரீராம ஜய ராம ஜய ஜய ராம'

இது ஸ்ரீராமனின் மிகப் பிரபலமான நாமஜபம் ஆகும். இதில் 'ஸ்ரீராம' என்ற வார்த்தை ஸ்ரீராமனை அழைப்பதாகும். 'ஜய ராம' என்ற வார்த்தை ஸ்துதி செய்யும் வாசகம் ஆகும் மற்றும் 'ஜய ஜய ராம' இது 'நம:' என்று மற்ற நாமஜபங்களில் இறுதியில் வரும் வார்த்தையைக் குறிக்கிறது. இது சரணாகதி செய்வதைக் குறிக் கிறது.

ராமாயணத்தில் 'ராமனைக் காட்டிலும் ராமநாமம் சிறந்தது' பற்றிய கதையை நாம் கேட்டுள்ளோம். எல்லோரும் தெரியும், 'ஸ்ரீராம'

என்று எழுதப்பட்ட கல்லும் சமுத்திரத்தில் மிதந்தது என்று. அதேபோல் ஸ்ரீராமனின் நாம ஜபத்தை செய்வதால் நம்முடைய ஜீவனும் இந்த வாழ்க்கைக்கடலைக் கடந்து முக்தி பெறும் என்பது நிச்சயம்.

**ஹே தர்மஸ்வரூபி**
**ஸ்ரீராமா, நானும்**

எப்பொழுதும் தர்மவழி நடக்கும்படி செய்வாய்!

ஸ்ரீராமநவமி அன்று அதிக செயல்பாட்டில் இருக்கும் ஸ்ரீராம தத்துவத்தின் அதிகபட்ச பயனைப் பெற என்ன செய்ய வேண்டும்?

ஆன்மீக கண்ணோட்டத்தில் ஒவ்வொரு தெய்வமும் ஒரு குறிப்பிட்ட தத்துவமாகும். ஸ்ரீராமநவமி அன்று பூஜையறையில் ஸ்ரீராம தத்துவத்தை ஆகர்ஷிக்கும் மற்றும் வெளியிடும் கோலத்தைப் போடவும். இக்கோலங்களைப் போடுவதால் அங்குள்ள வாயுமண்டலம் ஸ்ரீராம தத்துவத்தால் நிறையப் பெற்று அங்குள்ள எல்லோருக்கும் அதன் பலன் கிடைக்கிறது.

ஸ்ரீராமனின் ஒரு கையில் வில் உள்ளது. ஒரு கை ஆசீர்வாதத்தை நல்குகிறது. அனாசாரங்கள் மிகுந்துள்ள இன்றைய காலகட்டத்தில் நாம் பிரபு ஸ்ரீராமனின் மீது எவ்வகையில் பக்தி செலுத்துவது?

இன்று தெய்வ நிந்தனைகள் பல விதங்களில் நடக்கின்றன. சொற்பொழிவுகள், நூல்கள் போன்றவற்றின் மூலம் தெய்வங்களின் மீது அவதூறுகள் வாரி இறைக்கப்படுகின்றன. தெய்வங்களின் வேஷங்களை தரித்து பிச்சை எடுக்கின்றனர்.

வியாபார விளம்பரங்களில் தெய்வங்களை ‘மாடல்’கள் ரூபத்தில் உபயோகிக்கின்றனர். நாடகங்கள், சினிமாக்கள் மூலமாகவும் சர்வ சாதாரணமாக தெய்வ நிந்தனை நடந்து வருகின்றன. தெய்வ உபாசனையின் அடிப்படை ச்ரத்தை ஆகும். தெய்வங்களை இவ்வாறு அவமதிப்பதால் ச்ரத்தையின் மீது தீய பரிணாமம் ஏற்படுகிறது. அதனால் தர்மத்திற்கும் தீங்கு ஏற்படுகிறது. தர்மத்திற்கு ஏற்படும் தீங்கை தடுப்பது காலத்திற்கேற்ற அவசியமான தர்மவழியாகும். இதை செய்யாது தெய்வ உபாசனை பூரணமடையாது. ஸ்ரீராம பக்தர்களே, வாருங்கள் நீங்களும் தெய்வ நிந்தனையை தடுத்து நிறுத்தும் இப்பணியில் ஈடுபடுங்கள்.

– தகவல்: ஸனாதனின் கையேடு மற்றும்
www.spiritualresearchfoundation.org
தொடர்பு: 09380949626


ஆன்மிகமலர்




ஆன்மிக விஷயங்களின்
முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ-டியூப் சேனலில்
பதிவிடப்பட்டுள்ளோம்.
நமது சேனலில் சென்று
முழுவதுமாக பார்த்து
பயன் பெறுங்கள்...

ஆன்மிக சேவை
செய்யும் நமது
சேனலை
Subscribe
like & share

# ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்




## மச்ச அவதாரம்

பகவான் ஸ்ரீமன் நாராயணனின் தசாவதாரத்தில் முதலாவதான அவதாரம்.

"சைத்ரே மாசி சிதே பக்ஷே
த்ரயோதஸ்யாம் திதௌ விபு:
உதபூம் மத்ஸ்ய ரூபேண ரக்ஷார்தம்
அவனேர்ஹரி":

(சித்திரை மாத சுக்ல பட்சத்தில் த்ரயோதசி திதியில் (அமாவாசைக்குப் பின் 13ஆவது நாள்), ஹரியானவர் உலகத்தைக் காப்பதற்காக மீன் உருவத்தில் பிறந்தார்).

மத்ஸ்யாவதாரத்தில் ஸ்ரீமன் நாராயணன் வேதங்களை மீட்காவிட்டால் நமக்கு வேதங்கள் என்னும் உயரிய பொக்கிஷம் கிடைக்காமல் போயிருக்கும்.

முதலாவதாக சதுர் முக ப்ரம்மனிடம்,வேதங்களை கவர்ந்து சென்ற "ஹயக்ரீவன்" என்னும் அசுரனிடம்இருந்து வேதங்களை மீட்க ஸ்ரீமன் நாராயணர் முதன் முறையாக மீன் வடிவில் தோன்றிவேதத்தை மீட்டு பிரம்மனிடம் அளித்தார்.

இரண்டாவது முறையாக, "சத்யவ்ரதன்" என்னும் பாகவதோத்தம அரசனை ரக்ஷிக்க மீன் வடிவில் தோன்றி அவனை அனுகிரஹித்தார்.

"அனந்த சக்திர் பகவான் மத்ஸ்ய
ரூபீ ஜனார்தன:
க்ரீடார்தம் யாசயாம் ஆஸ
ஸ்வயம் ஸத்யவ்ரதம் ந்ருபம்"
"ஓம் சமுத்ரராஜாய வித்மஹே
கட்கஹஸ்தாய தீமஹி
தன்னோ மத்ஸ்ய ப்ரசோதயாத்"

## கூர்ம அவதாரம்

பகவான் ஸ்ரீமன் நாராயணனின் தசாவதாரத்தில் இரண்டாவதான அவதாரம்.

தேவர்களும் அசுரர்களும் அமரத்துவம் பெற மந்தார மலையை மத்தாகவும் வாஸுகி என்னும் சர்ப்பத்தை கயிறாகவும் பாற்கடலை கடைந்த பொழுது, பகவான் கூர்மம் (ஆமை) உருவம் எடுத்தி முதுகிலே தாங்கிக் கொண்டார்.

முதலில் மிகக்கொடியதான 'ஹாலாஹல' என்கிற விஷம் தோன்றியது. அதை சம்புவாகிய சங்கரரை லோகக்ஷேமத்திற்காக பருகினார். மறுபடியும் கடையும் பொழுது எண்ணற்ற திவ்ய வஸ்துக்கள் தோன்றின அவையாவன: காமதேனு (தெய்வீக பசு), ஐராவதம் (வெள்ளை யானை),

உச்சைசிரவஸ் (குதிரை), பாரிஜாதம், ஸ்ரீதேவி, வாருணி என்னும் அழகிய மங்கை, தன்வந்திரி மற்றும் பல.

### வராஹாவதாரம்

ஸ்ரீமன் நாராயணரின் தசாவதாரத்தில் மூன்றாவதான அவதாரமாகும்.

யக்ஞ வராஹஸ்வரூபி. பூர்வத்தில் பிரளய காலத்தில் நீரில் மூழ்கிய பூமியை வெளிக் கொண்டுவர யக்ஞ வராஹ மூர்த்தியாக அவதரித்து பூமியை வெளிகொண்டுவந்தார். ஹிரண்யாக்ஷகனை அழித்து வராஹமாக (வெள்ளை பன்றியாக) தனது கூர்மையான பற்களால் அவனை குத்தி கிழித்து வதம் செய்தார்.

### நரஸிம்ஹாவதாரம்

ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் தசாவதாரத்தில் நான்காவது திவ்ய அவதாரம்.

ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீ ப்ரஹ்லாதசரித்ரம் அதிசிரேஷ்டமான மஹாபுண்ணியசரிதம். ஸ்ரீமன் நாராயணர் எடுத்த அவதாரங்களிலேயே மிக மிக குறுகிய கால அவகாசம் (24நாழிகை) நரஸிம்ஹாவதாரம்.

ஹிரண்யகசிபுகயாது (லீலாவதி) தம்பதியரின் நான்கு புத்திரர்களின் ஒருவன். மிகுந்த இறை பக்தியும், பெரியோர்களிடமும் மரியாதையும் ப்ராஹ்மணர்களிடமும் விசுவாசமும், அநேக ஸத்வ குணங்களுடன் பிறந்தவன். வைஷ்ணவ சம்பிரதாயத்தில் ஸ்ரீநரசிம்ம வைபவம் மிகவும் ஸ்லாகித்து கூறப்படுகிறது. ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதரை அவரின் ப்ரதான சிஷ்யரான ஸ்ரீ பத்மபாதர் காபாலிகர்களிடமிருந்து ஸ்ரீநரஸிம்ஹரை உபாசனை செய்து அவரின் ஆகர்ஷண சக்தியால் காப்பாற்றினார். பரமேஸ்வரரும் ஸ்ரீமந்த்ரராஜ பத ஸ்தோத்திரத்தினால் நரசிம்மரை வழிபட்டார். மந்திரங்களில் ராஜாவாக இந்த ஸ்லோகம் கருதப்படுகிறது.

**ஸ்ரீப்ரஹ்மதேவர் ஸ்துதி**

நதோஊஸ்ம்யநந்தாய துரந்த ஸக்தயே
விசித்ர வீர்யாய பவித்ரகர்மணே !
விஸ்வஸ்ய ஸர்கஸ்திதி ஸம்யமான் குணை:
ஸ்வலீலயா ஸம்தததே (அ)வ்யயாத்மனே !!

### வாமன அவதாரம்

ஸ்ரீமன் நாராயணனின் 5 ஆவது திருஅவதாரம்.

விவஸ்வானுடைய புத்திரன் சிராத்த தேவன் ஏழாவது மனுவாக இருக்கிறார்.இந்த மன்வந்த்ரத்தில், ஸ்ரீமன் நாராயணர் கஸ்யபருடைய கடைசி புத்திரராக பாத்ரபத மாதத்திய சுக்ல பக்ஷ த்வாதசி திதியும், ச்ரவண நக்ஷத்திரமும் கூடிய சுப தினத்தில் அபிஜித் என்ற ச்ரவணத்தின் முதல் பாக நக்ஷத்திரத்தில் அதிதி மற்றும் கஸ்யபர் தம்பதிக்கு பயோ விரதத்தின் பலனாய் சங்கு, சக்கரம், கதை மற்றும் தாமரையுடன் பகவான் வாமனர் (குள்ளமான) கருப்பு நிற தேகத்துடனும், மஞ்சள் நிற ஆடையுடனும் அவதாரம் புரிந்தார். மார்பில் ஸ்ரீவத்ச அடையாளம் இருந்தது.

இந்திரனின் பெற்றோர் கஸ்யபர்அதிதி. ஆதலால் வாமனர் இந்திரனுக்கு சகோதரன் முறையாவார். ஸ்ரீமன் நாராயணனின் தசாவதாரத்தில் முழுமையான பிராம்மண அவதாரம் வாமன அவதாரம்தான். (பரசுராமர் அந்தணர் குலத்தில் பிறந்தாலும் 21 க்ஷத்ரிய வம்சத்து அரசர்களை அழித்ததனால் நிறைவான பிராம்மண அவதாரமாக நம் நினைவில் இருப்பதில்லை).

### பரசுராம அவதாரம்

ஸ்ரீமன் நாராயணரின் தசாவதாரங்களில் ஆறாவது திவ்ய அவதாரம்.

ஜமதக்னி ரேணுகாதேவியின் மகனாக பார்கவ ராமனாக அவதரித்தார். சிவனிடம் இருந்து பரசு என்னும் கோடரியை பெற்று, நீதி தவறியவர்களையும், ப்ராஹ்மணர்களை துவேஷிக்கின்ற க்ஷத்ரியர்களை 21 முறை அழித்தார்.

ஹைஹய வம்சத்தின் மாபெரும் சக்கரவர்த்தி கிருதவீர்யன் மகன் கார்த்தவீர்யார்ஜுனனை வதம் புரிந்தவரும் இவர்தான். ஸ்ரீராமாவதாரத்தில் இவர் தனது சக்திகளை ராமரிடம் அர்பணித்துவிட்டு சென்றார்.

### ஸ்ரீ ராமாவதாரம்

ஸ்ரீமன் நாராயணரின் தசாவதாரங்களில் ஏழாவது திவ்ய அவதாரம்.

ஸூர்ய குல தோன்றல். இக்ஷ்வாகு வம்சத்தில் தோன்றிய கட்வாங்கனுடைய குமாரன் தீர்க்கபாஹு புத்திரன் ரகு ரகுவின் புத்திரன் அஜன் புத்திரன் தசரதர் தசரதர் புத்திரர் ஸ்ரீராமர். ஸ்ரீமத் பாகவதம் ஸ்ரீராமரை 'மர்யாதா புருஷோத்தமன்' என்று புகழ்கிறது. ஸ்ரீமன் நாராயணர் எடுத்த அவதாரங்களில் மிக நீண்ட நெடிய அவதாரம் ஸ்ரீ ராம க்ருஷ்ண அவதாரங்கள் மட்டும்தான். நாடெங்கும் சுபிக்ஷம், ஜனங்கள் மனக்கவலை, துக்கம், வறுமை, பிணி, மூப்பு, பசி, தாகம் இன்றி சகல ஐஸ்வர்யங்களுடன் விளங்கினார். ஏகபத்தினி விரதராக ராஜ ரிஷியைப்போல் தர்மகளை அனுஷ்டித்து 13,000 வருடங்கள் அரசாட்சி புரிந்து சனாதன

தர்மத்தை நிலைநாட்டினார்.இவரின் ராஜ்ஜியம் 'ஸ்ரீராமராஜ்ஜியம்' என்று அழியாப்புகழ் பெற்றது.

ஸ்ரீராமகாதையை எவன் சிரத்தையுடன் கேட்டு மனதில் இருத்தி ஸ்மரிகின்றானோ அவன் அனைத்து கர்ம பந்தங்களில் இருந்து விடுபட்டு மன சாந்தியை அடைகிறான் என்று சுகர் ஸ்ரீபரீக்ஷித் மஹாராஜாவிற்கு கூறினார்.

## ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்

ஸ்ரீமன் நாராயணரின் தசாவதாரங்களில் எட்டாவது திவ்ய அவதாரம்.

யாதவ குலத்தில் மொத்தம் ஏழு பிரிவுகள் உள்ளன. அதில் ஹைஹேயர்கள் யாதவ குலத்தில் உயர் பிரிவை சேர்ந்தவர்களாகவும் மற்ற யாதவ குல பிரிவுகளான சேதர்கள், விதர்ப்பர்கள், அந்தகர்கள், குகுரர்கள், போஜர்கள் மற்றும் விருஷ்ணிகள்.

ஸ்ரீ கிருஷ்ணர் இதில் விருஷ்ணி பிரிவை சேர்ந்தவர். இவரால் வ்ருஷ்ணி வம்சமே புகழ் பெற்றது.

ஸ்ராவண பஹுள அஷ்டமியன்று ரோஹிணி நக்ஷத்திரத்தில் சந்திர வம்சத்தில் ஸ்ரீ வசுதே வருக்கும் தேவகிக்கும் பிறந்தவர். பின்பு கோகு லத்தில் யசோதா மற்றும் நந்த கோபரால் வளர்க்கப்பட்டவர்.

ஸ்ரீமத் பாகவதம் ஸ்ரீகிருஷ்ணரை 'புஷ்டி புருஷோத்தமன்' என்று புகழ்கிறது.

ஆயிரம் விஷ்ணு நாமங்கள் ஒரு ராம நாமத்துக்கு சமம் என்றும், மூன்று ராம நாமம் ஒரு கிருஷ்ண நாமத்துக்கு சமம் என்றும் சாஸ் த்திரங்களில் கூறப்பட்டு உள்ளது. (ஸ்ரீமத் பாகவதம் 1.19.6).

பகவத் கீதை என்னும் ஒப்பற்ற பொக்கிஷத்தை குருவாகி அர்ஜுனனை மூலமாக வைத்து நமக்கு அளித்த மஹா குரு. இந்த ஜகத்திற்கே ஆதி புருஷர் மற்றும் ஆதி குரு ஸ்ரீ கிருஷ்ணர் ஒருவர் மட்டுமே "ஸ்ரீ க்ருஷ்ணம் வந்தே ஜகத் குரும்" என்று நாம் வணங்கும் அனைத்து குரு மஹநீயர்களின் க்ருபா கடாக்ஷம் முடிவில் ஸ்ரீ க்ருஷ்ணரையே சென்று அடைகிறது.

ஸ்ரீமத் பாகவதம் (10ஆவது அத்யாயமான தசம ஸ்கந்தம்) மஹாபாரதம், விஷ்ணு புராணம், ஹரி வம்சம், ஸ்ரீ மகா பக்த விஜயம் முழுமையும் ஸ்ரீ கிருஷ்ண ப்ரபாவம்தான் மற்றும் ஸ்ரீ கிருஷ்ணரை பரம்பொருள் என்றும் பரமாத்மா என்றும் மோக்ஷத்தை அளிக்கும் ஒரே இறைவன் என்றும் புகழ்கிறது. பகவத் கீதையிலும் ஸ்ரீ கிருஷ்ணர் இதனையே உறுதிப்படுத்துகிறார்.

## பலராம அவதாரம்

ஸ்ரீமன் நாராயணரின் தசாவதாரங்களில் ஒன்பதாவது திவ்ய அவதாரம். வசுதேவருக்கும் ரோஹிணிக்கும் ஆதிசேஷ னின் அம்சமாக பிறந்தவர்.

வைகாசி மாத சுக்கில பட்ச திருதியை திதி யில், கிருஷ்ணருக்கு மூத்தவரான 'ஹலாயுதன்', 'ஸங்கர்ஷணன்' (பலராமன்) தோன்றினார்.

வைசாகே சுக்லபக்ஷே து த்ருதீயாயாம்
ஹலாயுத:
சம்கர்ஷணோ பலோ ஜக்ஞே ராம:
க்ருஷ்ணாக்ரஜோ ஹரி:

இவர் 'பலதேவர்', 'பலபத்திரர்', 'ஸங் கர்ஷணர்', 'ஹலாயுதன்' என்று பல திருநாமங் களில் அழைக்கப்படுகிறார். இவர் வெண்ணிற தோற்றத்தில் அபார தேஜஸுடன் இருப்பார். மிகுந்த பலசாலி உலகையே தாங்கும் ஆதிசேஷ னின் அம்சாவதாரம்.

ஈரேழு பதினான்கு லோகங்களையும் தாங்கு பவர். 7,32,000 கஜங்களின் (யானைகளின்) பலம் இவர்க்கு உண்டு. கையில் கலப்பை வைத்து இருப்பதால் விவசாயிகளின் முன்னோடியாக மற்றும் இறைவனாகவும் கருதப்படுகிறார்

## கல்கி அவதாரம்

பகவான் ஸ்ரீமன் நாராயணனின் தசாவதா ரத்தில் கடைசியான அவதாரம்.

கல்கி அவதாரம் எடுத்து கலியை அடங்குவர்.

ஸம்பலக்ராம: முக்யஸ்ய
ப்ராஹ்மனஸ்ய மகாத்மன:|
பவனே விஷ்னுயஸஸ:
கல்கி ப்ராதுர் பவிஷ்யதி|| (12215)
அதாசௌ யுகசந்த்யாயாம்
தஸ்யுப்ராயேஷு ராஜஸு|
ஜனிதா விஷ்னுயஸஸோ நாம்நா
கல்கிர்ஜகத்பதி:|| (1325)

(சம்பலக்கிராமத்தில் முக்கியஸ்தாராக விளங்கும் விஷ்ணுயாசர் என்பவரின் இல்லத் தில் கல்கி தோன்றுவார். யுகசந்தியில் கெட்ட குணங்கள் மேவிய காலத்தில் ஜகத்பதியான கல்கி விஷ்ணுயாசர் எனும் நாமத்தோடு ஜனனம் காண்பார்.)

ஓம் பரமபுருஷாய வித்மஹே
பாபஹராய தீமஹி
தன்னோ கல்கி ப்ரசோதயாத்

– மதுரை சு. ரகுராமன்
தொடர்பு எண்: 9940349593

மனம் உள்ளவன் மனிதன். மனிதனுக்கு மனம் என்று ஒன்று உள்ளது. அந்த மனம் என்பதை மூன்று வகைகளாக ஞானிகள் பிரித்துள்ளனர். அவை உள் மனம், வெளி மனம் மற்றும் ஆழ் மனம் என்பதாகும். அதில் உள் மனம் அசாதாரணமான சக்திகளைக் கொண்டது. இத்தகைய உள்மனதில் ஆற்றல்களை அறிந்து ஆன்மீக வழியில் பயன்படுத்தி அனுபவபூர்வமாக உணர்ந்துகொண்டால், மனிதன் தனது வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள முடியும். அதனால் நாம் மனஅமைதி, உடல் ஆரோக்கியம் மற்றும் பலவிதமான நன்மைகளை அடையலாம். இதற்கென்று பிரத்தியேகமான ஆற்றல்கள் எதுவும் தேவையில்லை. ஏனென்றால் மனிதர்களிடம் மட்டும் அதற்கு தேவையான ஆற்றல்கள் இருக்கிறது. மனித உள் மனதில் ஏராளமான ஆற்றல்கள் திறமைகள் ஆக்கபூர்வமான சக்திகள் அனைத்தும் உதவி செய்வதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. உள் மனம் கூறுவதைக் கேட்டு மனிதன் சிந்தித்து அதன்படி செயல்படும்போது அவன் விரும்பும் தேடும் அமைதி தானே அவனிடம் வந்து சேரும்.

பிரபஞ்ச ஆற்றல்கள் அனைத்தும் மனிதனுடைய உள் மனதில் இருக்கிறது. அதை நன்கு கவனித்து உணர்ந்து, அதை ஏற்றுக் கொள்ளும்போது, அது உங்களை உலகில் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்து விடும். அதன் மேல் நம்பிக்கை வைத்து விட்டீர்களானால் அது உலகில் உள்ள நன்மை தீமைகளை உங்களுக்கு வெளிப்படுத்திக் காட்டுவதோடு ஆன்மீக வழியில் அன்பையும் மனஅமைதியையும் கொடுக்கும். மனிதனின் உள்மனம் எப்போதும் நல்லவைகளையே எண்ணி நம்மை நல்வழிக்கு நடத்திச் செல்லும் என்பதை மறந்து விடாதீர்கள். நம் உள்மனம கூறுவதை கவனித்து செயல்படுவதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும். நமது உள்மனம் பிரபஞ்ச சக்தியின் ஆற்றலுடன் சேர்ந்து, அறியாமல் புரியாமல் இருந்த நல்ல விஷயங்களை நமக்கு நன்கு புரிய வைத்து, நமது குழம்பிய மனதை தெளிந்த நீரோடைபோல் ஆக்கிவிடும். அது பல்வேறு புதிய உத்திகளை நமது உணர்வுகள் மூலம் உருவாக்கிக் கொடுக்கும்.

நமது கவனக்குறைவால் அறிந்தும் அறியாமையினால் பிரம்மத்தினை இழந்து வாழ்க்கையில் நித்தியானந்தத்தினை இழந்து கொண்டு இருக்கிறோம். அறியாமை என்னும் மாயை நம்மை விட்டு நீங்கும்போது ஞானத்தின் மூலம் நாம் பிரம்மத்தை உணர முடியும். அவ்வாறு உணரும்போது நாம் விரும்பும் நிரந்தரமான மனஅமைதி கிடைக்கும். அந்த பிரம்மத்தை அடைவதற்கு அதாவது அந்த நித்யானந்தத்தை அடைவதற்கு ஆன்மீக வழியில் சரியான வழிமுறையில் நாம் செயல்பட வேண்டும். அதற்கு ஆன்மிகம் நமக்கு வழி காட்டுகிறது. நாம் ஆன்மிகம் காட்டும் வழியில் தகுந்த குருவின் மூலம் யோகா, தவம், தியானம், வாசியோகம் போன்ற பயிற்சிகளை தவறாமல் மேற்கொள்ளும்போது நித்யானந்தம் என்னும் பிரம்மத்தை அடையலாம். அவ்வாறு பிரம்மத்தை உள்மனம் உணரும்போது நாம் தேடும் விரும்பும் மனஅமைதியை பெறுவதற்கு முடியும்.


www.aanmeegamalar.com

உலகில் நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் நம்மிடம் செயல்படும் நிலைகளைப் பற்றி நாம் சிந்தித்து பார்த்தால் அவைகள் மூன்று நிலைகளில் செயல்படுவதை உணரலாம். முதலில் நாம் ஒரு செயலைச் செய்யும்போது நமது செயலில் சுயமுயற்சி இருக்க வேண்டும். நமது அந்த சுயமுயற்சியானது சரியான வழிமுறையில் இருக்க வேண்டும். நாம் மதுரைக்கு செல்ல வேண்டுமென்றால் ரயில், பேருந்து, கார் போன்ற எந்தவிதமான வாகனமாகக்கூட இருக்கலாம். ஆனால் மதுரைக்கு செல்லக்கூடிய வாகனத்தில்தான் நாம் ஏறி பயணம் செய்ய வேண்டும். இதுதான் சரியான அறிவுபூர்வமான முயற்சியாகும்.

இரண்டாவது காலம் நேரம் முக்கியமானது. அதாவது ஒரு செயலை செய்யும்போது உரிய காலத்தினை நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். நாம் செய்வதற்கு நினைத்த ஒரு பணியை குறிப்பிட்ட காலத்திற்குள் (funsuvality) தவறாமல் நாம் செயல்படுத்த வேண்டும். ஒருவன் மதுரை செல்லக்கூடிய ரயிலை குறிப்பிட்ட நேரத்திற்குள் சென்றால்தான் அவன் அந்த குறிப்பிட்ட ரயிலில் பயணம் மேற்கொள்ளலாம். அவன் தாமதமாகச் சென்றால் அந்த குறிப்பிட்ட ரயிலில் பயணம் செய்வதற்கு அவனால் முடியாது. அவனுடைய காலதாமதம்தான் ரயிலை தவற விட்டதற்கு முக்கிய காரணம் ஆகும். ஆனால் அவன் மற்றவர்களிடம் கூறும்போது அவனையும் அறியாமல் ‘நான் ஸ்டேஷனுக்கு வருவதற்குள் அந்த ரயில் சென்று விட்டது’ என்று கூறுவான்.

அவன் தான் தாமதமாக வந்ததைப் பற்றி தன்னுடைய குறையைக் கூறாமல், உணராமல் ரயிலின் மீது பழியினை போட்டு விடுவான். மேலும் அவன் அந்த ரயிலை தவற விட்டதால் ஒருவிதமான மன அழுத்தத்தில் துன்பத்தை அவனையும் அறியாமல் அவன் மனம் அனுபவிப்பதற்கு நேரிடுகிறது. அதனால் அவன் சிறிது மனஅமைதியைக்கூட அப்போது இழந்து விடுகிறான். அவன் ரயிலைத் தவறவிட்டது பற்றி கவலைப்படாமல் ‘இதுவும் ஒரு நன்மைக்கே’ என்று அவன் மனதில் இயல்பாக எடுத்துக்கொண்டு தனது அடுத்த பணியைத் தொடர வேண்டும். இதனை ஆன்மிகம் நமக்கு கற்றுக்கொடுக்கிறது. மேலும் அது நமது மனஅழுத்தத்தை குறைப்பதோடு நம்முடைய மனதை அப்போது ஆறுதல்படுத்தி ஆன்மீக வழியில் மனஅமைதியை அளிக்கிறது.

மூன்றாவது தெய்வ அனுக்கிரகம் இருக்க வேண்டும். தெய்வம் என்றால் நம் கண்ணுக்குத் தெரியாத ஒருவிதமான பிரபஞ்


• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

ச சக்தி ஆகும். விக்கினத்தைப் போக்கும் கடவுளை விக்னேஸ்வரன் என்று அழைக்கிறோம். எனவே நாம் ஒரு செயலை தொடங்கும்போது அச்செயல் தடையில்லாமல் நிறைவேற வேண்டும் என்று பெரும்பாலும் விக்கினேஸ்வரனை வணங்கி வேண்டிக் கொள்கிறோம். சிலர் தங்களது இஷ்ட தெய்வத்தை, சிலர் குலதெய்வத்தை வேண்டிக் கொள்வார்கள். ஏன் என்றால் நாம் ஒரு செயலை தொடங்கும்போது சில நேரங்களில் நம்மையும் அறியாமல் சில தடைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

நாம் ஒருசெயலை மேற்கொள்ளும்போது மூன்று நிலைகளில் நமக்குத் தடைகள் வரக்கூடும். எடுத்துக்காட்டாக நாம் புதிய வீடு ஒன்று கட்டுவதற்கு தொடங்குகிறோம் என்று வைத்துக் கொள்வோம். அப்போது பலத்த காற்று மழை வந்து விட்டால் வீடுகட்டும் செயல், அப்போது தடைபட்டு விடுகிறது. இது இயற்கையினால் வரக்கூடிய தடையாகும். அதாவது மழை, வெள்ளம், புயல்காற்று போன்ற இயற்கையினால் வரக்கூடிய தடைகள் ஆகும். மனிதன் வாழும் அல்லது இருக்கும் சூழ்நிலையினால் தடைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. அதாவது ஒரு காரணகாரியத்துடன் பேருந்தில் ஏறி ஓரிடத்திற்கு பயணம் செல்கிறோம். அப்போது திடீரென நாம் பயணம் மேற்கொள்ளும் பேருந்தின் டயர் பஞ்சராகி விடுகிறது அல்லது அந்த பேருந்து ஓட்டுனருக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டு பயணத்தில் தடை ஏற்பட்டு விடுகிறது. இவைகள் எல்லாம் சூழ்நிலையினால் ஏற்படக்கூடிய தடைகள் ஆகும். இதேபோன்று வீட்டிலும் வெளியிலும் ஒரு செயலை செய்யும்போது சூழ்நிலைகள் சரியில்லாமல் இருப்பது போன்ற பலவிதமான தடைகள் ஏற்படக்கூடும்.

மூன்றாவது தடை நமது மனம் ஆகும். நாம் பணியில் ஈடுபடும்போது அதில் முழுமனதுடன் ஈடுபடாமல் இருப்பது ஆகும். அதாவது வேண்டாவெறுப்பாக நாம் அந்தப்பணியை செய்து கொண்டிருப்பது. அதனால் நாம் செய்யும் அந்தப்பணியில் நாம் நினைத்தபடி வெற்றி அடைவதற்கு முடிவதில்லை. எடுத்துக்காட்டாக வகுப்பில் ஒரு மாணவன், படிப்பதற்கு விரும்பாமல் ஆசிரியர் அருகில் இருந்துகொண்டு தன்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்ற பயத்தில் புத்தகத்தினை விரித்து வைத்துக்கொண்டு படிப்பதுபோல் நடித்துக்கொண்டு இருப்பது. அவன் படிப்பில் கவனமில்லாமல் மன ஈடுபாடில்லாமல் இருப்பது ஆகும். இந்த மூன்றாவது தடையை நாம் தவிர்க்க முடியும். நாம் செய்யும் பணியில் மனம் முழு ஈடுபாட்டுடன் இருந்தால்தான் எதிலும் வெற்றி காண முடியும். எனவே ஆன்மிக கருத்துகளில் முழுநம்பிக்கையும், மனஉறுதியும் இருக்க வேண்டும். அவ்வாறு இருக்கும்போதுதான் நாம் தேடும் விரும்பும் மன அமைதி கிடைக்கும்.

அறம், பொருள், இன்பம் வீடு போன்ற புருஷார்த்தங்களை அடைவதால் கிடைக்கும் மகிழ்ச்சியை, பிரம்மத்தை, நித்தியானந்தத்தினை மனஅமைதியை அடைவதற்கு விரும்புகிறவர்கள், வானில் பறந்து செல்லும் பறவை போன்று இருக்க வேண்டும். பறவையின் ஒரு இறக்கைபோன்று நாம் ஆன்மீகத்தில் நமது விடாமுயற்சியாக இருக்க வேண்டும். பறவையின் மற்றொரு இறக்கைபோன்று தெய்வீக அனுக்கிரகத்தை பெறுவதற்கு நாம் முயற்சியில் ஈடுபடவேண்டும். பறவையின் இரு இறக்கைகள்போன்று செயல்பட்டு ஆன்மீகம் என்னும் வானத்தை அடைவதற்கு முயற்சி செய்வதற்கு வேண்டும். நமக்கு அறிவுபூர்வமாகவும் அனுபவபூர்வமாகவும் ஞானத்தை தெளிவுபடுத்துவது, உணர்த்துவது வேதங்கள் உபநிடதங்கள் இதிகாசங்கள் ஆகும்.

மனம் உடையவன் மனிதன் என்று அழைக்கப்படுகிறான். மனிதனைத் தவிர மற்ற உயிரினங்களுக்கு மனம் என்பது இல்லை. இந்த மனதை வைத்துதான் மனிதன் உயர்ந்தவனாக கருதப்படுகிறான். மனிதனுடைய மனதை வெளிமனம், உள்மனம், ஆழ்மனம் என மூன்று வகையாக ஞானிகள் பிரித்துள்ளனர். நம்மில் பெரும்பாலானவர்கள் நம்முடைய வெளிமனம் எண்ணுவதை அது கூறுவதைத்தான் கேட்டு செயல்படுகிறார்கள். இந்த வெளிமனம் ஒரு செயலை செய்யும்போது எவ்விதக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் எண்ணிச் செயல்படும் தன்மையுடையது. இந்த வெளிமனம் அறிவுபூர்வமாக சிந்தித்து செயல்படுவதில்லை. எனவே இந்த வெளிமனம் கூறுவதுபோல் அல்லது எண்ணுவதுபோல் செயல்படும்போது நாம் அந்தச்செயலில் வெற்றி நிச்சயம் பெறுவோம் என்று கூறுவதற்கு முடியாது. இந்த வெளிமனம் ஒரு பொருளை எண்ணும்போது எடுத்தோம் கவிழ்த்தோம் என்ற நிலையில்தான் செயல்படும்.

எடுத்துக்காட்டாக கடையில் ஒரு பொருளைப்

பார்த்தவுடன் வெளிமனம் வாங்கும்படி நமது ஆசையைத் தூண்டுகிறது. நாம் வாங்கும் அந்தப் பொருளினால் வரக்கூடியது நன்மையா தீமையா? இன்பமா துன்பமா? என்பது பற்றி வெளிமனம் சிந்திப்பதில்லை. கிராமங்களில் சண்டை சச்சரவுகள் நிகழும்போது பெரியவர்கள் சமாதானப்படுத்தும் நோக்கத்தோடு பேச்சு வழக்கில் ‘எதையும் மேம்போக்காக பார்க்காதே’ என்று சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டிருப்பவர்களைப் பார்த்து இப்படிக் கூறுவதைக் கேட்டிருப்போம். உலகில் ஏற்படும் பிரச்சனைகளை மேம்போக்காக பார்த்தால் பிரச்சினைக்குத் தீர்வு கிடையாது என்பதை இதன்மூலம் அறிந்து கொள்ளலாம்.

உலகில் எதையும் மேம்போக்காக பார்ப்பது, கேட்பது, செயல்படத் தூண்டுவது நமது வெளிமனம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இந்த வெளிமனம் மூலம் நாம் மனஅமைதி அடைவதற்கு வாய்ப்பில்லை. நாட்டிலும் வீட்டிலும் பிரச்சனைகள் உருவாவதற்கு, நாம் இந்த வெளிமனம் கூறுவதை கேட்டு செயல்படுவதுதான் முக்கிய காரணம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நாம் வெளிமனம் கூறுவதை ஓரளவுக்கு கேட்கலாம் ஆனால் அதன்படி செயல்படுவதை முற்றிலும் தவிர்த்து விடவேண்டும்.

உள்மனதின் தன்மை செயல்பாடுகள் வெளி மனதிற்கு முற்றிலும் வேறுபட்டது. கடையில் ஒரு பொருளைப் பார்த்தவுடன் வெளிமனம் வாங்கும்படி ஆசையைத் தூண்டி விடுகிறது. ஆனால் நாம் நமது உள்மனதிடம் அப்பொருளைப் பற்றி கேட்டால் அது சிந்தித்து அப்பொருளை வாங்கலாமா? வேண்டாமா? என்பதை சிந்தித்து செயல்படும் தன்மையுடையது. எடுத்துக்காட்டாக ஒரு கடையில் நுழைந்து ஏதாவது ஒரு பொருளை வாங்கலாம் என்று நினைக்கிறோம். அப்போது கடையில் நாம் ஒரு அழகான வண்ணக்குடையைப் பார்க்கிறோம். உடனே நம் வெளிமனம் நம்மை அந்த அழகிய வண்ணக்குடையை வாங்கும்படி ஆசையைத் தூண்டுகிறது.

நாம் சற்று சிந்தித்து வெளிமனம் கூறுவதை தவிர்த்து, உள்மனதிடம் இந்த அழகான குடையை வாங்கலாமா என்று கேட்டுப்பாருங்கள். உள்மனம் நம்மிடம் ‘இது குளிர்காலமாக இருப்பதால் இப்போது இந்தக் குடையை வாங்குவதால் உனக்குப் பயன்படுவதில்லை. அதன் அருகில் இருக்கும் ‘குளிர்காலத்திற்கு அணியக்கூடிய கம்பளிநூலினால் பின்னப்பட்ட சட்டை



(sweater) இருக்கிறது. அதனை வாங்கினால் குளிர்காலத்திற்கு உனக்கு பயனுள்ளதாக இருக்கும் அதனை வாங்கு’ என்று நம்மை வாங்கும்படி அறிவுறுத்தும். நமது வெளிமனம் உணர்வுபூர்வமாகவும் சிந்திக்காமலும் எதிர்மறையாக எண்ணிகொண்டு அவசரமாக செயல்படும் தன்மையுடையது. அதாவது நம் வெளிமனம் சிந்திப்பதிலும் செயல்படுவதிலும் எடுத்தோம் கவிழ்த்தோம் என்பதைப் போன்றது. ஆனால் நமது உள்மனம் அனுபவபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் சிந்தித்து நேர்மறையாக எண்ணி செயல்படும் தன்மையுடையது.

கல்வி பயிலும் மாணவர்கள் கருத்தூன்றி பாடங்களைப் படிக்கும்போது அதிலுள்ள கருத்துக்கள் மாணவர்கள் மனதில் நன்கு பதியும் என்று ஆசிரியர்கள் அடிக்கடி மாணவர்களுக்கு அறிவுறுத்துவார்கள். மாணவமாணவிகள் கருத்தூன்றி படிக்கும்போது படிப்பதை உள்மனம் நன்கு கேட்டு மனதில் நன்கு பதிவு செய்து வைத்துக் கொள்கிறது. உலகில் காணும் பரபரப்பான சூழ்நிலையில் வெளிமனம் செயல்படக்கூடியது. ஆனால் உள்மனம் அமைதியான சூழ்நிலையில்தான் செயல்படும்.

உங்கள் உள்மனதில் உள்ள திறமைகளையும் அதன் செயல்படும் திறமையையும் தெரிந்து கொண்டு சரியானபடி அதை பயன்படுத்தும் வழிமுறைகளைத் தெரிந்து கொண்டால் வாழ்க்கையில் நீங்கள் துன்பப்பட வேண்டியதில்லை. நாம் தேடும் விரும்பும் அமைதி கிடைக்கும். மூன்றாவது மனம் ஆழ்மனம் ஆகும். ஆழ்மனம் என்றால் என்ன? அது எவ்வாறு செயல்படுகிறது அதனை அறிந்து கொள்வது எப்படி என்பதைப் பற்றி பார்ப்போம்.

(அமைதி தொடரும்)

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

**Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : C.N.Raja, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# ஆன்மிகமலர்.காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## இணையதளம் வாயிலாக மாதம் இரண்டுமுறை வெளிவரும்

## ஆன்மிகமலர் மெயில் புக்

அனைத்து இதழ்களையும்
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்து பயன் பெறலாம்.

உங்கள் நலம் விரும்பிகளுக்கு
ஷேர் செய்து அவர்கள்
பயன்பெற உதவுங்கள்

மேலும் விபரங்களுக்கு 9444228203



aanmeegamalar